TO SHARE THE LIGHT

# தீபகச் சுடர்

அக்டோபர் 2026

தீபம் 15 சுடர் 05

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



## தீபகத்திலிருந்து இறையாசீர்

அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,

# அன்னையோடு செபமாலை பயணம்



குழந்தைகள், இளைஞர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் ஓர் அன்பான அழைப்பு.

அக்டோபர் மாதம் கத்தோலிக்கத் திருஅவையின் பாரம்பரியத்தில் **செபமாலை அன்னையின் மாதமாக** சிறப்பிக்கப்படுகிறது. இயேசுவின் அன்னை மரியாவை அன்புடன் நினைவுகூரவும், செபமாலையின் வழியாக கிறிஸ்துவின் வாழ்வின் மறையுண்மைகளைத் தியானிக்கவும் இந்த மாதம் நம்மை அழைக்கிறது.

செபமாலை என்பது வெறும் சொற்களைத் திரும்பத் திரும்பச் சொல்லும் செபம் அல்ல. அது அன்னை மரியாவின் கரத்தைப் பற்றிக்கொண்டு, இயேசுவின் பிறப்பு, பணி, பாடுகள், உயிர்ப்பு மற்றும் மகிமை ஆகிய மீட்பின் நிகழ்வுகளுக்குள் பயணம் செய்வதாகும். ஒவ்வொரு மறையுண்மையிலும் நாம் இயேசுவைச் சந்திக்கிறோம் அவருடைய அன்பைக் கற்றுக்கொள்கிறோம் நமது வாழ்வை அவருடைய வாழ்வோடு இணைத்துக்கொள்கிறோம்.

### மரியா நம்மை இயேசுவிடம் அழைத்துச் செல்கிறார்

கானாவூர் திருமண விழாவில், **"அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்"** (யோவான் 2:5) என்று மரியா பணியாளர்களிடம் கூறினார். இதுவே இன்றும் அன்னை மரியா நமக்குத் தரும் செய்தியாகும். அவர் தம்மை மையப்படுத்துவதில்லை மாறாக, நம்மை இயேசுவிடம் அழைத்துச் செல்கிறார்.

"அருள் நிறைந்த மரியே வாழ்க" என்று நாம் செபிக்கும்போது, வானதூதர் கபிரியேல் கூறிய வாழ்த்தையும், எலிசபெத்து கூறிய ஆசிமொழியையும் நினைவுகூர்கிறோம் (லூக்கா 1:28,42). எனவே, செபமாலை திருவிவிலியத்தில் வேரூன்றிய ஒரு செபமாகும். நற்செய்தியின் முக்கிய நிகழ்வுகளை நமது உள்ளத்தில் பதியவைக்கும் ஓர் எளிய தியானப் பள்ளியாகவும் அது விளங்குகிறது.

மரியா, இயேசுவைப் பற்றிய நிகழ்வுகளையெல்லாம் **"தமது உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக்கொண்டிருந்தார்"** (லூக்கா 2:19). செபமாலை செபிக்கும்போது நாமும் மரியாவைப் போல இறைவார்த்தையை உள்ளத்தில் ஏற்று, சிந்தித்து, வாழக் கற்றுக்கொள்கிறோம்.

### குடும்பத்தை ஒன்றிணைக்கும் செபம்

இன்றைய குடும்பங்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றன. பெற்றோரின் வேலைப்பளு, குழந்தைகளின் படிப்புச் சுமை, இளைஞர்களின் குழப்பங்கள், கைப்பேசி மற்றும் சமூக ஊடகங்களின் ஆதிக்கம் ஆகியவை குடும்ப உறுப்பினர்கள் ஒரே வீட்டுக்குள் இருந்தாலும் தனித்தனி உலகங்களில் வாழச் செய்கின்றன.

இந்தச் சூழலில் குடும்பச் செபமாலை அனைவரையும் மீண்டும் ஒன்றாக அமரச் செய்கிறது. ஒருவரை ஒருவர் பார்க்கவும், கேட்கவும், அன்போடு செபிக்கவும்

வாய்ப்பளிக்கிறது. குடும்பத்தில் அமைதி, மன்னிப்பு, ஒற்றுமை மற்றும் நம்பிக்கையை வளர்க்கிறது. குடும்பச் செபம் எல்லாப் பிரச்சினைகளையும் உடனடியாக நீக்கிவிடாது. ஆனால் அவற்றை இறைநம்பிக்கையோடு எதிர்கொள்ளும் வலிமையைத் தருகிறது.

எனவே, அக்டோபர் மாதத்தில் ஒவ்வொரு குடும்பமும் நாள்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தைச் செபமாலைக்காக ஒதுக்குவோம். முடியுமானால் முழுச் செபமாலையையும் செபிப்போம். நேரம் குறைவாக இருந்தால், குறைந்தபட்சம் ஒரு பத்து மணியையாவது குடும்பமாகச் செபிப்போம். குடும்பத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் மாறிமாறி ஒரு மறையுண்மையை வழிநடத்தலாம்.

## குழந்தைகளுக்கு ஓர் அழைப்பு

அன்பான குழந்தைகளே, செபமாலை உங்கள் கைகளில் இருக்கும் ஒரு சிறிய விண்ணக மாலை. அதன் ஒவ்வொரு மணியிலும் இயேசுவுக்கும் அன்னை மரியாவுக்கும் நீங்கள் ஒரு மலரை அர்ப்பணிப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள்.

உங்கள் பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள், நோயுற்றவர்கள் மற்றும் ஏழைக் குழந்தைகளுக்காகச் செபியுங்கள். செபமாலை சொல்லும்போது அவசரப்படாமல், இயேசுவின் வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்வுகளை மனக்கண்ணால் காண முயலுங்கள். தினமும் ஒரு பத்து மணியைச் செபிப்பது உங்கள் வாழ்வில் நல்ல பழக்கத்தையும், உள்ளத்தில் அமைதியையும் வளர்க்கும்.

## இளைஞர்களுக்கு ஓர் அழைப்பு

அன்பான இளைஞர்களே, உங்கள் வாழ்க்கை பல கனவுகள், முடிவுகள், உறவுகள் மற்றும் சவால்கள் நிறைந்தது. உங்கள் அழைப்பையும் எதிர்காலத்தையும் சரியாகத் தேர்ந்தெடுக்க இறைவனின் வழிகாட்டுதல் அவசியம்.

செபமாலை உங்கள் மனதை அமைதிப்படுத்தி, உங்கள் வாழ்க்கையை இயேசுவின் பார்வையில் காண உதவும். உங்கள் படிப்பு, வேலை, நட்பு, திருமண அழைப்பு அல்லது இறையழைத்தல் ஆகிய அனைத்தையும் அன்னை மரியாவின் வழியாக இயேசுவிடம் ஒப்படையுங்கள். தினமும் கைப்பேசிக்காகச் செலவிடும் நேரத்தில் சில நிமிடங்களையாவது செபமாலைக்காக வழங்குங்கள். பயணத்தின்போது, காத்திருக்கும் நேரத்தில் அல்லது இரவு உறங்குவதற்குமுன் ஒரு பத்து மணியைச் செபியுங்கள்.

செபமாலையை ஒரு பழைய பக்திமுயற்சியாக எண்ணாதீர்கள். அது சிதறிய மனத்தை ஒருமுகப்படுத்தும் செபம் சோதனைகளில் உறுதியாக நிற்க உதவும் ஆன்மிக வலிமை சரியான முடிவுகளை எடுக்க வழிகாட்டும் அமைதியின் பாதை.

## பெற்றோர்களுக்கு ஓர் அழைப்பு

அன்பான பெற்றோர்களே, குழந்தைகளுக்கு நீங்கள் வழங்கும் செல்வங்களிலேயே மிகப் பெரியது இறைநம்பிக்கையாகும். செபமாலை செபிக்கும்படி குழந்தைகளிடம் கூறுவது மட்டும் போதாது, அவர்களோடு அமர்ந்து செபிப்பதே சிறந்த சாட்சியாகும்.

வீட்டிலுள்ள அன்னை மரியாவின் திருவுருவத்திற்குமுன் ஒரு விளக்கை ஏற்றி, குடும்பத்தினரை அன்போடு ஒன்றுசேர்த்து, சிறிது நேரம் செபியுங்கள். குழந்தைகளை வற்புறுத்தாமல், செபத்தின் பொருளை எளிமையாக விளக்குங்கள். குடும்பத்தின் தேவைகள், இறந்தவர்கள், நோயுற்றவர்கள், ஏழைகள், தனிமையில் இருப்பவர்கள் மற்றும் உலக அமைதிக்காகச் செபிக்க அவர்களைப் பழக்குங்கள்.

பெற்றோரின் முழந்தாள் செபம் குழந்தைகளின் எதிர்காலத்தை ஆசீர்வதிக்கிறது. குடும்பம் சேர்ந்து செபிக்கும் காட்சி, குழந்தைகளின் மனதில் வாழ்நாள் முழுவதும் அழியாத நம்பிக்கையின் நினைவாக நிலைத்திருக்கும்.

## பங்குகள் மேற்கொள்ளக்கூடிய முயற்சிகள்

**அக்டோபர் மாதத்தில் நமது பங்குகள் செபமாலை பக்தியைப் புதுப்பிக்க சில எளிய முயற்சிகளை மேற்கொள்ளலாம்:**

- தினமும் திருப்பலிக்கு முன்போ பின்போ சமூகமாகச் செபமாலை செபித்தல்.
- குடும்பங்கள் மாறிமாறி செபமாலையை வழிநடத்துதல்.
- அன்னை மரியாவின் திருவுருவத்தை வீடுகளுக்கு எடுத்துச் சென்று குடும்பச் செபம் நடத்துதல்.
- குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான செபமாலைப் போட்டிகள், விவிலிய வினாடி வினா மற்றும் படைப்பாற்றல் நிகழ்வுகளை நடத்துதல்.
- நோயுற்றோர், முதியோர் மற்றும் தனிமையில் வாழ்பவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களோடு செபித்தல்.
- உலக அமைதி, குடும்ப ஒற்றுமை, இளைஞர்களின் நல்வாழ்வு மற்றும் திருஅவையின் தேவைகளுக்காகச் சிறப்பு செபமாலை நடத்துதல்.
- செபத்தோடு இணைந்து ஏழை அல்லது தேவையில் இருக்கும் ஒரு குடும்பத்திற்கு உதவுதல்.

## செபமாலையோடு வாழ்வையும் இணைப்போம்

அன்னை மரியாவை மதிப்பது அவருடைய திருவுருவத்திற்கு மலர் அணிவிப்பதோடு முடிவதில்லை. அவரைப்போல இறைவார்த்தையைக் கேட்பதும், இறைத்திட்டத்திற்கு "ஆம்" என்று கூறுவதும், துன்பப்படுவோருக்கு உதவுவதும், இயேசுவை நமது வாழ்வில் பிறருக்குக் கொடுப்பதுமே உண்மையான மரியன்னை பக்தியாகும்.

செபமாலை செபித்த பிறகு குடும்பத்தில் கோபமும் பகையும் தொடரக் கூடாது. செபித்த கரங்கள் உதவி செய்ய முன்வர வேண்டும். அன்னை மரியாவை வாழ்த்தும் உதடுகள் பிறரை இகழக் கூடாது. இயேசுவின் மறையுண்மைகளைத் தியானிக்கும் இதயம் ஏழைகள், நோயுற்றவர்கள் மற்றும் துன்பப்படுவோரின் குரலைக் கேட்க வேண்டும்.

இந்த அக்டோபர் மாதத்தில் நாம் ஒரு சிறிய உறுதி எடுப்போம்: **தினமும் செபமாலை செபிப்போம் குடும்பமாக ஒன்றிணைவோம் இறைவார்த்தையைத் தியானிப்போம் அன்பின் செயல்களைச் செய்வோம்.**

அன்னை மரியாவின் கரத்தைப் பற்றிக்கொண்டு இயேசுவை நோக்கி நடப்போம். நமது குழந்தைகள் நம்பிக்கையில் வளரவும், இளைஞர்கள் தூய்மையுடனும் தெளிவுடனும் வாழவும், பெற்றோர்கள் அன்பிலும் பொறுமையிலும் நிலைத்திருக்கவும், குடும்பங்கள் ஒற்றுமையின் இல்லங்களாக மாறவும் செபிப்போம்.

***செபமாலை அன்னையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!***
***எங்கள் குடும்பங்களை உமது அன்புப் பாதுகாப்பில் காத்தருளும்!***
***எங்களை எப்போதும் உமது திருமகன் இயேசுவிடம் அழைத்துச் செல்லும்! ஆமென்.***

முனைவர் அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 01.10.2026 | குழந்தை இயேசுவின் புனித தெரேசா விழா - திருப்பலி | 07 |
| 02.10.2026 | புனித காவல் தூதர்கள் - திருப்பலி | 08 |
| 04.10.2026 | பொதுக்காலம் 27வது ஞாயிறு -திருப்பலி | 10 |
| 05.10.2026 | அருளாளர் ஆல்பர்ட்டோ மர்வெல்லி - திருப்பலி | 12 |
| 07.10.2026 | புனித செபமாலை அன்னை - திருப்பலி | 13 |
| 11.10.2026 | பொதுக்காலம் 28வது ஞாயிறு - திருப்பலி | 15 |
| 13.10.2026 | அருளாளர் அலெக்சாண்றினா மரிய தகோஸ்தா- திருப்பலி | 16 |
| 14.10.2026 | புனித முதலாம் கனிஸ்டஸ் - திருப்பலி | 18 |
| 15.10.2026 | இயேசுவின் (அவிலா நகர்) புனித தெரேசா - திருப்பலி | 19 |
| 17.10.2026 | அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் - திருப்பலி | 21 |
| 18.10.2026 | பொதுக்காலம் 29வது ஞாயிறு - திருப்பலி | 22 |
| 22.10.2026 | புனித இரண்டாம் ஜான்பால் - திருப்பலி | 24 |
| 24.10.2026 | புனித அந்தோணி மரிய கிளாரெட் - திருப்பலி | 25 |
| 25.10.2026 | பொதுக்காலம் 30வது ஞாயிறு -திருப்பலி | 27 |
| 28.10.2026 | புனிதர்கள் சீமோன், யூதா, திருத்தூதர்கள் விழா- திருப்பலி | 28 |
| 29.10.2026 | அருளாளர் தொன் மைக்கேல் ரூவா - திருப்பலி | 30 |


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...


| | |
|---|---|
| இறைவன் தந்த வானத்தூதர்கள் | 33 |
| அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் வாழ்வை அறிவோம் | 36 |
| அருளாளர் தொன் மைக்கேல் ரூவா வாழ்வு தரும் பாடம் | 39 |
| திருஅவைச் செய்திகள் | 43 |
| கடவுள் அமைத்து வைக்கும் மேடை | 46 |
| மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு | 48 |

## பகுதி-1

# வழிபாட்டு வழிக்காட்டி

# குழந்தை இயேசுவின் புனித தெரேசா விழா

திருப்பலி
01.10.2026

## முன்னுரை

*திருமதி. பவுலின் ரோஸ்*

"குழந்தை உள்ளத்தோடு இறைவனை நம்பி, சிறிய செயல்களையும் பெரிய அன்போடு செய்வோம்"

இறையேசுவின் இறைச்சமூகமே, இன்றைய முதல் வாசகத்தில், தாய் தன் குழந்தையை அரவணைத்து ஆறுதல்படுத்துவதுபோல், இறைவன் தம் மக்களைத் தேற்றி ஆறுதல்படுத்துகிறார். தாயின் அரவணைப்பில் அமைதியாக இருக்கும் குழந்தையைப் போல, ஆணவமின்றி இறைவனில் அமைதி காணும் உள்ளத்தை இன்றைய முதல் வாசகம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. நற்செய்தியில் இயேசு, குழந்தையைத் தம் சீடர்களின் நடுவில் நிறுத்தி, குழந்தையைப் போலத் தன்னைத் தாழ்த்திக்கொள்பவரே விண்ணரசில் பெரியவர் என்று கற்பிக்கிறார்.

இந்த இறைவார்த்தையைத் தனது வாழ்வாக மாற்றியவர் இன்று நாம் சிறப்பிக்கும் புனித குழந்தை இயேசுவின் தெரேசா, இளம் வயதிலேயே கார்மேல் துறவற வாழ்வைத் தேர்ந்தெடுத்த இவர், பெரிய செயல்களைச் செய்ய முடியாவிட்டாலும், அன்றாட வாழ்வின் மிகச் சிறிய செயல்களைக்கூட மிகுந்த அன்போடு இறைவனுக்காகச் செய்ய முடியும் என்பதை உணர்ந்து தம் வாழ்வில் வாழ்ந்துக் காட்டினார். இதுவே அவரது புகழ்பெற்ற "சிறுவழி" - Little Way ஆனது.

தனது பலவீனங்களைக் கண்டு சோர்ந்துபோகாமல், ஒரு சிறு குழந்தை தந்தையின் கரங்களில் தன்னை ஒப்படைப்பதுபோல, இறைவனின் இரக்கமுள்ள அன்பில் முழுமையாக நம்பிக்கை வைத்தார். தாழ்ச்சி, எளிமை, நம்பிக்கை, அன்பு ஆகியவற்றின் வழியாக தூய்மை அடையலாம் என்பதை அவர் தனது வாழ்வால் கற்றுத் தந்தார். திருஅவையில் தான் என்ன செய்ய வேண்டும் என்று ஆழமாகத் தேடிய தெரேசா இறுதியில், "என் அழைப்பைக் கண்டேன்; என் அழைப்பு அன்பே' திருஅவையின் இதயத்தில் நான் அன்பாக இருப்பேன்" என்று மகிழ்ச்சியோடு உணர்ந்தார். திருஅவையில் பல்வேறு பணிகளும் அழைப்புகளும் இருந்தாலும், அவை அனைத்திற்கும் உயிர் கொடுப்பது அன்பே என்பதை அவர் கண்டுணர்ந்தார்.

கார்மேல் மடத்தின் நான்கு சுவர்களுக்குள்ளேயே வாழ்ந்த இவர், மறைப்பணியாளர்களுக்காகச் செபித்து, அவர்களது பணிகளைத் தனது தியாகங்களால் தாங்கினார். இதனால் அவர் இன்று மறைப்பணிகளின் பாதுகாவலராகவும், தனது ஆழமான ஆன்மிக ஞானத்தால் திருஅவையின் மறைவல்லுநராகவும் போற்றப்படுகிறார். எனவே இன்றைய திருப்பலியில், புனித தெரேசாவைப்போல நாமும் குழந்தை உள்ளத்தோடு இறைவனை நம்பி,

பெருமையைத் தேடாமல் தாழ்ச்சியுடன் வாழ்ந்து, நமது அன்றாட வாழ்வின் சிறிய செயல்களையும் பெரிய அன்போடு செய்து, திருஅவையின் தூண்களாக வாழும் அருளை பெற இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. **திருஅவைக்காக:** திருஅவையின் தூணாக நின்று செயல்படும் எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் அர்ப்பண வாழ்வில் ஈடுபட்டுள்ள அனைவரும், புனித தெரேசாவைப் போல குழந்தை உள்ளத்தோடு இறைவனில் நம்பிக்கை வைத்து, தாழ்ச்சியிலும் அன்பிலும் இறைமக்களை வழிநடத்தி, திருஅவையின் இதயத்தில் இறையன்பை வளர்க்கும் கருவிகளாகத் திகழ அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

2. **மறைப்பணியாளர்களுக்காக:** அன்பின் இறைவா, உலகெங்கும் நற்செய்தியை அறிவிக்கும் மறைப்பணியாளர்கள், மறைக்கல்வியாளர்கள் மற்றும் நற்செய்திப் பணியாளர்கள் அனைவரும், புனித தெரேசாவின் பரிந்துரையால் செபத்திலும் அன்பிலும் வலிமை பெற்று, தங்கள் வாழ்வாலும் பணியாலும் கிறிஸ்துவின் அன்பை மக்களிடம் கொண்டு செல்லும் இறைத்தூதுவர்களாக செயல்பட உமது தூய ஆவியாரின் அருட்கொடைகளை இவர்களுக்கு நிறைவாகப் பொழிந்தருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

3. **துன்பங்களிலும் சோர்விலும் இருப்பவர்களுக்காக:** மருத்துவர்களுக் கெல்லாம் மருத்துவராக இருந்து செயல்படும் எம் இறைவா, பலவிதமான நோய்களால் அவதிப்படுவோர், தனிமை, குடும்பப் பிரச்சினை, மனச்சோர்வு மற்றும் பல்வேறு துன்பங்களால் பாதிக்கப்பட்டுள்ள அனைவரும், தாயின் மடியில் அமைதியடையும் குழந்தையைப் போல இறைவனின் அன்பில் ஆறுதலும் நம்பிக்கையும் பெற்று, தங்கள் வாழ்வில் உள்ள அனைத்து துன்பங்களிலிருந்தும் விடுதலைப்பெற்று நிறைமகிழ்வோடு வாழ அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. **இங்கு கூடியிருப்போருக்காக:** எங்கே இரண்டு மூன்றுப்பேர் என் பெயரால் கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவே நான் இருக்கின்றேன் என்று மொழிந்த அன்பு தந்தையே, இன்று இத்திருப்பலியில் பங்கேற்கும் ஒவ்வொருவரும், புனித தெரேசாவின் சிறுவழியைப் பின்பற்றி, பெருமையைத் தேடாமல் தாழ்ச்சியுடன் வாழ்ந்து, அன்றாட வாழ்வின் சிறிய செயல்களையும் பெரிய அன்போடு செய்து, குடும்பத்திலும், திருஅவையிலும், சமூகத்திலும் உம் சாட்சிகளாக வாழ அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

# புனித காவல் தூதர்கள்

திருப்பலி
02.10.2026

## முன்னுரை

திரு.T. சாம்சன்

இறையேசுவில் பிரியமானவர்களே, கத்தோலிக்க திருஅவையினரால் அனுசரிக்கப்படும் நினைவுத் திருநாட்களில் காவல் தூதர்கள் திருவிழாவும் ஒன்று. கி.பி. 4ம் நூற்றாண்டில் கத்தோலிக்கர்கள் காவல் தூதர்களின் நினைவாக பலிபீடங்களை அமைத்து விழாக்கள் எடுத்துக் கொண்டாடினர். இந்த பக்தியானது யூத மதத்திலிருந்து கிறிஸ்தவ திருஅவைக்கு பெறப்பட்ட ஒரு பண்டைய பாரம்பரியமாகும். இது முதன் முதலில் பிரான்சிஸ்கன் சபையினரால் கி.பி. 1500ம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது. கி.பி. 1607ம் ஆண்டு திருத்தந்தை ஐந்தாம் பவுல் அவர்களால் உரோமை நாட்காட்டியில் இடம் பெறச் செய்யப்பட்டது. காவல் தூதர்களின் முக்கிய பணியானது, கடவுளுக்கு முன்பாக தாம் பாதுகாப்பவர்களை பிரதிநிதித்துவம் செய்வதும், எப்போதும் அவர்களைக் கண்காணிப்பதும், அவர்களுடைய செபத்திற்கு உதவுவதும், அவர்களை கத்தோலிக்க மரபுப்படி பிறப்பிலிருந்து இறப்புவரை உதவி செய்து அவர்களின் ஆன்மாவை கடவுளுக்கு முன் நிறுத்துவதுமாகும்.

மத்தேயு 18:10ல் இயேசுவின் இவ்வார்த்தைகள் இவ்விசுவாசத்தை ஆதரிக்கின்றன. இச்சிறியோருள் ஒருவரையும் நீங்கள் இழிவாகக் கருதவேண்டாம். கவனமாயிருங்கள் இவர்களுடைய வானதூதர்கள் என் விண்ணகத் தந்தையின் திருமுன் எப்பொழுதும் இருக்கிறார்கள் என நான் உங்களுக்குச் சொல்கிறேன் என்றார். கி.பி. 12ம் நூற்றாண்டின் பெரிய சீர்த்திருத்தவாதியான புனித பெர்னார்ட் தமது நாட்களில் வானதூதர்களின் பக்தியை பறைச்சாற்றிய ஒரு சிறந்த சொற்பொழிவாளர் ஆவார். விடுதலைப் பயண நூல் 23:20ல் ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார். "இதோ நான் உனக்குமுன் ஒரு தூதரை அனுப்புகிறேன்" என்று வாக்குக் கொடுத்தார்.

திருப்பாடல் 91:11-12ல் எந்த தீங்கும் உமக்கு நேரிடாது என்றும், உன் கால் கல்லின்மேல் மோதாதபடி தூதர்கள் தங்கள் கைகளில் உம்மைத் தாங்கிக் கொள்வர் என்றும் திருப்பாடல் 34:76ல் ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வோரை அவர்தம் தூதர்கள் சூழ்ந்து நின்று காத்திடுவர் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு ஒவ்வொரு மனிதருக்கும் மனித வழிகாட்டியும் பாதுகாப்பாளரும் தேவை என்ற நிலையில் அப்பணிகளை நிறைவேற்றுபவரே காவல் தூதர்கள். நாம் ஒரே இடத்தில் சோர்ந்து அமர்வதும், முன்னோக்கிச் செல்ல அச்சம் கொள்வதும், ஆபத்துள்ள காலத்தில் நம்மை வழிநடத்திச் செல்பவரும் காவல்தூதர்களே. எனவே நாம் அவரது உதவியை நாடி செபிப்பது அவசியம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் கூறியுள்ளார். எனவே நாம் எங்குச் சென்றாலும் வானத்தூதர்களின் செபத்தை சொல்லிவிட்டுச் சென்றால் நம்மை வழிநடத்திச் செல்வார்கள் என்ற நம்பிக்கையோடு இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரையும் உமது காவல்தூதர்களைக் கண்டு பாதுகாத்து பராமரிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் மக்கள் நலனில் அக்கறையுடனும், பொறுப்புடனும் கடமையாற்ற அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளிலும் உமது தூதர்கள் வழிநடத்தவும், தொடர்ந்து பாதுகாக்கவும், தாராள உள்ளத்தை நாட்டுத்தலைவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. படைப்பின் பரம்பொருளே எம் இறைவா, பருவமாறுபாடு காரணமாக பரவிவரும் நோய்த்தொற்றுக்காரணமாக நோய்கள் பரவி, மக்களை ஆபத்துக்கள் சூழ்ந்துவருகின்ற காரணத்தாலும், இயற்கை பேரழிவினால் மாய்ந்துக்கொண்டிருக்கும் உம் மக்களை ஆசீர்வதியும். அவர்களுக்கு நீரே உற்றத்துணையாக இருந்து எல்லா ஆபத்துக்களிலிருந்தும், விபத்துக்களிலிருந்தும் பாதுகாக்க உமது வானத்தூதர்களை அனுப்பி வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 27வது ஞாயிறு

திருப்பலி
04.10.2026

## முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

I. *எசா. 5: 1-7* II. *பிலி 4: 6-9* *மத். 21: 33-43*

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, ஒருதாய் தன் குழந்தையை கருவில் சுமக்கும்போது கண்ணில் காணாத குழந்தையை அது ஆணா, பெண்ணா என்று அறியும் முன்னரே அக்குழந்தையை கருத்தாய் கவனமாய் பேணி காக்கின்றாள். பிறந்தவுடன் அக்குழந்தைக்காக தன்னுயிரைவிட மேலாக அக்குழந்தையை வளர்த்தெடுக்கின்றாள். சிறிது காலத்திற்குப்பின் அக்குழந்தை தன் தாயை ஊதாசீனப்படுத்தி விட்டுச் செல்லும்போது அத்தாயின் மனம் படும் வேதனையை வெளியில் சொல்ல முடியாமல் தவிக்கின்ற அத்தாயின் அன்பு அத்தகையது என்றால், பண்படுத்தப்பட்ட உலகில் பரமனின் சாயலில் தான் படைத்த அனைத்தையும் ஆள படைத்த மனிதன், அதில் தான் தேர்ந்தெடுத்த இஸ்ரயேல் குடும்பத்தார் இறைவனின் திராட்சைத் தோட்டமாகிய திருஅவை அதன் உரிமையாளர் கடவுள் நம்மீது அளவில்லா அன்புக்கொண்டு அவரது பிள்ளைகளாகிய நாம் அவரைப் போன்றே நற்குணங்களைக் கொண்டவர்களாய் விளங்க விரும்புகிறார்.

நாம் அவர் விரும்பிய பிள்ளைகளாக வாழ்கின்றோமா? நம்மிடம் சுயநலப் பாவங்கள் பெருகும்போது நம்மை மீட்டு காத்திட எத்தனையோ இறைவாக்கினர்களை அனுப்பினார். அவர்களின் வார்த்தைகளுக்கு நாம் செவிக்கொடுக்கவில்லை. கடைசியாக தன் ஒரே மகனை அனுப்பினார். நாம் அவரின் வார்த்தைக்குச் செவிக்கொடுக்காமல் வாழ்கின்றோம். நம்மையே நாம் சீர்த்தூக்கிப் பார்க்க இன்றைய வாசகங்கள் நம்மை அழைக்கின்றது. இறைவன் நம்மிடம் எதிர்ப்பார்க்கும் குணங்கள் அன்பு, நீதி, நேர்மை, அமைதி, உண்மை, சமத்துவம் போன்ற நற்குணங்களை கொண்டவர்களாய் நாம் விளங்க வேண்டுமென்று இறைவன் விரும்புகிறார். நாம் வாழும் நாட்களில் இறைவனுக்கேற்ற பிள்ளைகளாக வாழ முயற்சியெடுப்போம். கடவுளின் வருகையின்போது நாம் அவருக்கு ஏற்றவர்களாய் வாழாவிடில் நாம் அனைவரையும் பிடிங்கி எறிந்து சுட்டெரிக்கப்படும் என எச்சரிக்கையும், அதே சமயம் இயேசுவின் வழியில் அவரது கட்டளைகளை ஏற்று நடந்தால் மீட்பு நிச்சயம் என வாழ்வுக்கான வழியையும் இன்றைய வாசகங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

மேலும் இன்றைய நாளில் கத்தோலிக்க திருஅவை புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருவிழாவினைக் கொண்டாடுகின்றது. இயற்கையையும், இறைவனின் படைப்புகள் அனைத்தையும் நேசிக்க அப்புனிதரைப்போல நாமும் எளிமையோடும் அமைதியின் தூதுவர்களாகவும் வாழ அழைக்கப்படுகின்றோம். மேலும் இறைவன் விரும்பும் நற்கனிகளைத் தரும் திராட்சைக் கொடிகளாக வாழ உலக கவலைகளை விடுத்து அவர் விரும்பும் பலனைத்தர நன்றியோடு கூடிய இறைவேண்டல் மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாக கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களை தெரிவிக்க இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. இறைவனின் திருஅவை என்னும் திராட்சைத் தோட்டத்தை பேணிக்காத்திட உம்மால் எனக்கு அளிக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அத்தோட்டத்திற்கு நல் பாதுகாவலர்களாய் இருந்திடத் தேவையான பொறுமை, சகிப்புத்தன்மை, பற்றற்ற நிலை தாம் ஏற்றுக்கொண்ட பொறுப்பின் உன்னத நிலையின் பொருள் உணர்ந்து வாழ்ந்திட தேவையான அருளையும் ஆசீரையும் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அமைதியின் காரணரே எம் இறைவா, உலகெங்கும் ஒவ்வொரு நாளும் பேரச்சம் கொள்ளும் நிகழ்வுகள் அரங்கேற்றி வருகின்றது. உலக நாடுகளிடையே போர்கள், வன்முறைகள், இயற்கையின் பேரழிவுகள், வெள்ளம், பூகம்பம், எரிமலை வெடிப்பு இவையனைத்தும் இறையாட்சி இம்மண்ணிலிருந்து அகற்றப்படுகின்றது என்பதை எங்களுக்கு உணர்த்துகிறது. இறைவா நாங்கள் இழந்த அன்பு, பணிவு, கனிவு, இரக்கம்

சுயநலமற்ற நிலை போன்றவற்றை மீண்டுமாய் எங்களில் வளர நல்லுள்ளத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. கருணையின் திருவுருவே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள், தங்கள் மனம்போன போக்கில் நாட்டையாளாமல், வகுப்புவாத தூண்டுதல்கள், மதக்கலவரம், சாதிய பாகுபாடு, லஞ்சம், ஊழல் போன்றவற்றைக் கண்டும் காணாதவர்களாய் இல்லாமல் இறைச்சித்தத்தின்படி நாட்டையாளவும் நீதி, கண்ணியம், நேர்மை, தூய்மையான உள்ளம் போன்ற நற்பண்புகளைக் கொடுத்து அனைவரும் ஒரே மக்கள் என்ற பரந்த உள்ளத்தை அவர்களுக்கு அளித்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. பாதுகாப்பின் பெட்டகமே, வளரும் எம் பிள்ளைகள் காட்டு திராட்சை செடிகளாக பலன்தராத கொடியாக வளராமல், இறையன்பை உணர்ந்தவர்களாய் இறைவனின் நற்கொடைகளான அன்பு, இரக்கம், பணிவு, மன்னிப்பு தாராள குணம் ஆகிய நற்பண்புகளைப் பெற்று நீர் விரும்பும் நல்ல திராட்சைக் கொடியாக வளர்ந்து பண்மடங்கு பலன்தர உமது தூய ஆவியாரின் அருட்கொடைகளை பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# அருளாளர் ஆல்பர்ட்டோ மர்வெல்லி

திருப்பலி
05.10.2026

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

இறை இயேசுவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே, இன்றைய திருவழிபாடு நம்மிடம் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்கிறது: "எனக்கு அடுத்திருப்பவர் (அயலான்) யார்?". சுயநலமும், மனிதநேயமற்ற போக்கும் பெருகிவரும் இவ்வுலகில், ஜாதி, மத, இன எல்லைகளைக் கடந்து, துன்பப்படுபவர்களிடம் இரக்கம் காட்டுபவனே உண்மையான அயலான் என்பதை "நல்ல சமாரியன் உவமை" வழியாக இயேசு நமக்குக் கற்றுத்தருகிறார். மேலும் இன்று நாம், "புனிதராக வாழ்வதே என் வாழ்வின் ஒரே நோக்கம்" என்று 15 வயதிலேயே தன் நாட்குறிப்பில் எழுதி, அன்றாடத் திருப்பலி, நற்கருணை ஆராதனை மற்றும் செபமாலை வழியாகத் தன் ஆன்மீக வாழ்வை ஆழமாக வேரூன்றச் செய்த அருளாளர் ஆல்பர்ட்டோ மர்வெல்லி அவர்களின் விழாவையும் கொண்டாடுகிறோம். 28 வயதே வாழ்ந்த இந்த இளைய புனிதர், தூய நற்கருணையின் ஆற்றலைக் கொண்டு இவ்வுலகில் அன்பின் சாட்சியாக வாழ்ந்து காட்டினார். இன்றைய திருப்பலியில் பங்கேற்கும் நாமும், அருளாளர் ஆல்பர்ட்டோவின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு, நம்முடைய அன்றாடக் கடமைகளிலும், சமூகப் பணிகளிலும் கிறிஸ்துவின் அன்பைப் பிரதிபலிக்கவும், ஏழை எளியவர்களிடம் இறைவனைக் காணவும் தேவையான அருளைக் கேட்டு, இத்திருப்பலியில் பக்தியுடன் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்புத் தந்தையே இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும், நல்ல சமாரியனைப் போல நலிந்தவர்களையும், ஒதுக்கப்பட்டவர்களையும் தேடிச் சென்று அன்பு செய்யும் நல் ஆயர்களாகத் திகழவும், இறை இரக்கத்தின் சாட்சிகளாக வாழவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆறுதலின் இறைவா, உலகெங்கிலும் ஏழ்மை, நோய், போர் மற்றும் அநீதியால் பாதிக்கப்பட்டு, பாதையோரம் வீசப்பட்டவர்களைப் போலத் தவிக்கும் மக்களைக் கண்ணோக்கியருளும். அவர்களுக்குத் தேவையான நல் உள்ளங்களை நல்ல சமாரியர்களைப் போல அனுப்பி, அவர்களின் காயங்களைக் குணப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நல்வழிகாட்டியான இறைவா, இன்றையச் சூழ்நிலையில் வாழும் இளைய தலைமுறையினர் உலக இன்பங்களில் மூழ்கிவிடாமல், அருளாளர் ஆல்பர்ட்டோவைப்போல் நற்பண்புகளிலும், இறை பக்தியிலும், சமூகப் பொறுப்புணர்விலும் வளர்ந்து, சமுதாய மாற்றத்தின் கருவிகளாகத் திகழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# புனித செபமாலை அன்னை

திருப்பலி
07.10.2026

## முன்னுரை

*திருமதி. பவுலின் ரோஸ்*

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, "மரியன்னையோடு இணைந்து கிறிஸ்துவின் மறையுண்மைகளைத் தியானித்து, இறைவனின் திருவுளத்திற்கு நம்பிக்கையுடன் 'ஆம்' சொல்வோம்" என்ற அழைப்பை இன்றைய இறைவார்த்தை நமக்கு முன்வைக்கிறது.

இன்றைய முதல் வாசகத்தில், இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பின் திருத்தூதர்கள் அனைவரும் ஒருமனப்பட்டு செபத்தில் நிலைத்திருந்ததை நாம் காண்கிறோம். அவர்களோடு இயேசுவின் தாய் மரியாவும் இருந்தார். தொடக்கத் திருஅவையின் பிறப்பை எதிர்நோக்கிய அந்தச் செபக் கூட்டத்தில் மரியாவின் இருப்பு மிகவும் அர்த்தமுள்ளது. அச்சமும் எதிர்பார்ப்பும் நிறைந்திருந்த அந்த நேரத்தில், அவர் சீடர்களோடு தங்கி செபத்தில் நிலைத்திருந்தார். இவ்வாறே, நம் வாழ்விலும் பல நேரங்களில் குழப்பங்களிலும் காத்திருப்புகளிலும் மரியன்னை நம்மையும் செபத்திற்கு அழைக்கிறார். பதிலுரைப் பாடலாக நாம் பாடும் மரியாவின் புகழ்ப்பாடல், அவரது உள்ளத்தின் ஆழமான இறைநம்பிக்கையை வெளிப்படுத்துகிறது: தன்னை

உயர்த்திக்கொள்ளாமல், இறைவன் செய்த அருஞ்செயல்களைப் புகழ்ந்து பாடும் மரியா, உண்மையான செபம் நம்மை நம்மிடமிருந்து இறைவனை நோக்கிச் செல்ல நம்மை மனம்மாற்றி திருந்தி வாழ நமக்குக் கற்றுத்தருகிறார்.

நற்செய்தியில் கபிரியேல் தூதர் மரியாவுக்கு இறைவனின் திட்டத்தை அறிவிக்கிறார். "இது எப்படி நிகழும்?" என்று கேட்டாலும், இறுதியில் மரியா முழு நம்பிக்கையுடன், "நான் ஆண்டவரின் அடிமை; உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று பதிலளிக்கிறார். இந்த ஒரே "ஆம்" வழியாக இறைவனின் மீட்புத் திட்டம் மனித வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்துகிறது. இன்று நாம் கொண்டாடும் புனித ஜெபமாலை அன்னையின் திருவிழா, மரியாவை மட்டும் நோக்கி நிற்கும் பக்தி அல்ல; மரியாவோடு சேர்ந்து இயேசுவின் வாழ்வு, பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பு ஆகிய இரட்சிப்பின் மறையுண்மைகளைத் தியானிக்க அழைக்கும் ஆன்மிகப் பாதையாகும். ஒவ்வொரு "அருள் நிறைந்த மரியே" செபமும், இறைவனின் வார்த்தையை உள்ளத்தில் ஏற்றுக்கொண்ட மரியாவின் நம்பிக்கையை நமக்குள் வளர்க்க வேண்டும்.

ஜெபமாலை நம் கைகளில் இருக்கும் மணிகளின் தொடராக மட்டும் இருந்துவிடக்கூடாது. அது நம் இதயத்தை மெதுவாக இயேசுவை நோக்கித் திருப்பும் ஒரு பயணமாக மாற வேண்டும். மகிழ்ச்சியில் இறைவனைப் புகழவும், துன்பத்தில் அவரில் நம்பிக்கை கொள்ளவும், முடிவெடுக்க வேண்டிய நேரங்களில் அவரது திருவுளத்தைத் தேடவும், வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும் "உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று சொல்லவும் ஜெபமாலை நம்மை பயிற்றுவிக்கிறது. எனவே இன்றைய திருப்பலியில், மரியன்னைப்போல இறைவார்த்தையை திறந்த உள்ளத்தோடு ஏற்றுக்கொள்ளவும், தொடக்கத் திருஅவையைப் போல ஒருமனப்பட்டு செபத்தில் நிலைத்திருக்கவும், நமது குடும்பங்களில் ஜெபமாலை செபத்தை உயிருள்ள விசுவாச அனுபவமாக மாற்றவும், கிறிஸ்துவை இன்னும் ஆழமாக அறிந்து அவரைப் பின்பற்றவும் தேவையான அருளை இறைவனிடம் வேண்டுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இறைச்சமூகமே, திருஅவையின் தலைவரான எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், அர்ப்பண வாழ்வினர் மற்றும் இறைமக்கள் அனைவரும், மரியன்னை மற்றும் திருத்தூதர்களைப் போல ஒருமனப்பட்டு செபத்தில் நிலைத்து, தூய ஆவியின் வழிநடத்துதலை நாடி, உலகிற்கு கிறிஸ்துவின் நற்செய்தியை துணிவுடன் அறிவிக்கும் திருஅவையாகத் திகழ அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

2. நமது குடும்பங்கள் அனைத்தும் அன்பிலும் ஒற்றுமையிலும் வளர்ந்து, பெற்றோரும் பிள்ளைகளும் ஒன்றிணைந்து செபிக்கும் பழக்கத்தை

வளர்த்துக் கொண்டு, குறிப்பாக ஜெபமாலையின் வழியாக இயேசுவின் வாழ்வையும் இறைவார்த்தையையும் தியானித்து, தங்கள் இல்லங்களை நம்பிக்கையும் அமைதியும் நிறைந்த சிறு திருஅவைகளாக மாற்ற அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

3. உலக, நாட்டுத் தலைவர்கள், தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நோக்கத்தினை மனதில் கொள்ளாமல், சுயநலத்தோடும், அளவுக்கற்ற ஆசைகளாலும் மக்களின் தேவைகளை நிறைவேற்றாமல், அவர்களின் பெயர்களைச் சொல்லி ஏமாற்றித் திரியும் மனநிலையை மாற்றி அவர்களுக்குரிய உரிமையை முழுமையாக அளித்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நோய், குடும்பப் பிரச்சினைகள், தனிமை, அச்சம், போர், வன்முறை, மனவேதனை மற்றும் எதிர்காலத்தைப் பற்றிய குழப்பம் ஆகியவற்றால் துன்புறும் அனைவரும், மரியன்னையின் தாழ்மையான பரிந்துரையால் இறைவனின் ஆறுதலையும் துணிவையும் பெற்று, தங்கள் வாழ்விலும் இறைவன் செயல்படுகிறார் என்ற நம்பிக்கையில் உறுதியடைய அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.



## பொதுக்காலம் 28வது ஞாயிறு

திருப்பலி
11.10.2026

### முன்னுரை

*திரு.T. சாம்சன்*

*I. எசா. 25: 6-10 II. பிலி. 4: 12-14, 19-20 மத். 22: 1-14*

“அழைக்கப்பட்டோர் பலர் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களோ சிலர்”

இறையேசுவின் இனியத் திருக்குலமே, உலகில் பிறந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு நோக்கத்திற்காக இம்மண்ணுலகிற்கு வந்துள்ளோம், அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை மனதில் கொண்டு வாழ இறைவன் நம்மை படைத்துள்ளார். இவரின் அழைப்பு இறையழைப்பாகவோ அல்லது குடும்ப அழைப்பாகவோ இருக்கலாம். இவற்றை நாம் எவ்வாறு கடைப்பிடித்து இறைவனில் இணைந்து வாழ்கின்றோம் என்பதை சற்று சிந்தித்துப் பார்ப்போம். இறைவன் தன் உடலையும், இரத்தத்தையும் தானமாக நமக்காக கொடுத்துள்ளார். ஆனால் நமது வாழ்வில் இறைவனை மறந்து அன்றாட நிகழ்வுகளால் சீரழிந்துக்கொண்டிருக்கின்றோம். குருத்துவப் பணியை ஏற்றுக்கொண்டவர்கள் தன்னலம் துறந்து, முழுமையாக இறைப்பணிக்காக அர்ப்பணித்து வாழவும், குடும்ப பொறுப்பினை ஏற்று வாழும் குடும்ப உறுப்பினர்களும் இறைவனில் இணைந்து வாழ வேண்டுமென்று அழைத்திருக்கின்றார்.

அன்றாட வாழ்வில் பல குறைகளைச் செய்தாலும் அவற்றை நம் இறைவன் மன்னித்து மீண்டுமாய் தன்னிடம் வரவழைக்கின்றார். அப்படிப்பட்ட

இறைவனிடம் நாம் நம்மையே ஏமாற்றிக்கொண்டு வாழ்கின்றோம். நமது தகுதியின்மையை உணர்ந்து கடவுளிடத்தில் மன்னிப்பு வேண்டி மன்றாடுகின்றபோது அவர் நம்மை முழுமையாக ஏற்றுக்கொள்வார். நமது வாழ்விலும் ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து அனைவரையும் அன்பு செய்து வாழவும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, மன்னித்து வாழும்போது இறைவன் நம்மில் வாழ்கின்றார் என்ற சிந்தனையோடு இன்றைய திருப்பலியில் பக்தியோடு பங்கு பெறுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் திருப்பணியாளர்கள் அனைவரையும் உமது தூய ஆவியாரின் அருட்கொடைகளைப் பொழிந்து மக்களை இறைவழியில் நாளும் வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் மக்கள் நலனில் அக்கறையுடனும், பொறுப்புடனும் கடமையாற்ற அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளிலும் உமது அருட்கொடைகளை நிறைவாகப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

3. படைப்பின் பரம்பொருளே எம் இறைவா, பருவநிலைக் காரணமாக பரவிவரும் நோய்த்தொற்று, அதிகமான வெப்பநிலையினால் விவசாயம், குடிநீரின்றி தவிப்போருக்கு நல்லதொரு மழையினைப் பொழிந்து நாட்டு மக்களின் வாழ்வாதாரம் செழிக்க உமது கருணையினால் ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. திருஅவையின் வருங்காலத் தூண்களாக திகழ எம் இளைஞர்களை நீர் இனம்கண்டு ஆசீர்வதிக்க வேண்டுமென்றும், அதற்கு தகுதியான நல்ல குழந்தைகளை உருவாக்க பெற்றோர்களை ஆசீர்வதித்து, உமது சித்தப்படி அக்குழந்தைகள் உருவாக உமது அருட்துணையை பொழிந்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



## அருளாளர் அலெக்சாண்றினா மரிய தகோஸ்தா

திருப்பலி
13.10.2026

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

அன்பர்களே, இன்று நாம் கத்தோலிக்க திருஅவையின் உன்னத ஆன்மீகப் புதல்வியும், நற்கருணை பக்தியின் பிறப்பிடமுமான அருளாளர் அலெக்சாண்றினா மரிய தகோஸ்தா அவர்களின் திருவிழாவை கொண்டாடுகிறோம். போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த இவர், தனது 14ஆம் வயதில் தனது கற்பைக் காத்துக் கொள்ள ஜன்னலிலிருந்து கீழே குதித்து,

வாழ்நாள் முழுவதும் முடங்கிப் போனார். படுக்கையிலேயே முடங்கிக் கிடந்த போதிலும், அவர் தனது துன்பங்களை கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளோடு இணைத்துக் கொண்டார். எல்லாவற்றிற்கும் மேலாக, தனது வாழ்வின் கடைசி 13 ஆண்டுகள் எந்தவொரு உணவோ, தண்ணீரோ இன்றி, நற்கருணையை மட்டுமே உட்கொண்டு வாழ்ந்து, நற்கருணை இயேசுவின் பிரசன்னத்திற்கு வாழும் சாட்சியாகத் திகழ்ந்தார். "பாவிகளே, என் உடல் துகள் உங்களுக்கு மீட்பளிக்க உதவுமென்றால், அதன் மேல் நடந்து செல்லுங்கள் ஆனால் இனி ஒருபோதும் பாவம் செய்யாதீர்கள், இயேசுவை வேதனைப்படுத்தாதீர்கள்" என்ற உன்னத செய்தியை உலகிற்குத் தந்தவர்.

மேலும், இன்றைய நற்செய்தி வழியாக ஆண்டவர் இயேசு நம்மிடம் எதிர்பார்ப்பது வெளிவேடமற்ற, தூய்மையான வாழ்வை மட்டுமே. பரிசேயர்களைப் போல நம்முடைய வெளிப்படையான சடங்குகளுக்கும், தூய்மைச் சடங்குகளுக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தை விட, நம் உள்ளத்தின் தூய்மைக்கும், பிறரன்பிற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று அவர் நமக்கு அழைப்பு விடுக்கின்றார். நம்முடைய உள்ளமும், எண்ணங்களும் கடவுளுக்கு உகந்தவையாக மாற வேண்டும். நம்மிடம் உள்ளவற்றைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுத்து, உண்மையான அன்பிலும், நீதியிலும் வாழும் வரத்தை வேண்டி, இந்தத் திருப்பலியில் தகுந்த மனப்பக்குவத்தோடு பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பு இறைவா, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவியர் அனைவரும், வெளிவேடமற்ற தூய்மையான மனதோடு நற்செய்திப் பணியைச் செய்ய தேவையான ஞானத்தையும், ஆற்றலையும் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. கருணையின் ஊற்றே இறைவா, எங்களிடம் உள்ள நன்மைகளையும், செல்வங்களையும் சுயநலமாகச் சேர்த்து வைக்காமல், எங்களைச் சுற்றியுள்ள ஏழைகள், தேவையிலிருப்பவர்கள் மற்றும் கைவிடப்பட்டவர்களோடு பகிர்ந்து வாழும் தாராள குணத்தை எங்களுக்குத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கமுள்ள ஆண்டவரே, இன்றைய திருப்பலியில் பங்கெடுக்கும் நாங்கள் எங்களது உள்ளத்தில் மறைந்திருக்கும் பொறாமை, கோபம், கபடு போன்ற தீமைகளை அகற்றி, உண்மையான அன்போடும், அருளாளர் அலெக்சாண்றினா தனது படுக்கை வாழ்வையே உமக்கு உகந்த பலியாக மாற்றியது போல, உலகில் படுக்கையிலும், தீராத நோய்களாலும், மனவேதனைகளாலும் அவதிப்படும் அனைத்து சகோதர சகோதரிகளும் தங்களின் துன்பங்களை கிறிஸ்துவின் சிலுவையோடு இணைத்து, மீட்பின் கருவியாக மாற்றும் மனப்பக்குவத்தைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# புனித முதலாம் கனிஸ்டஸ்

திருப்பலி
14.10.2026

## முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

"மனந்திரும்புகிறவர்களுக்கு இறைவனின் இரக்கத்தின் கதவு எப்போதும் திறந்திருக்கிறது."

புனித முதலாம் கனிஸ்டஸ் கத்தோலிக்க திருஅவையின் 16ஆம் திருத்தந்தை ஆவார். இவர் கி.பி. 217 முதல் 222 வரை உரோமை ஆயராகவும் திருத்தந்தையாகவும் பணியாற்றினார். இவரது திருவிழா அக்டோபர் 14 அன்று கொண்டாடப்படுகிறது. இவர் கல்லறைத் தொழிலாளர்களின் பாதுகாவலராக போற்றப்படுகிறார். அவர் கிறிஸ்தவர் என்பது தெரியவந்தபோது, சார்தீனியா (Sardinia) தீவில் உள்ள சுரங்கங்களில் கட்டாய வேலை செய்ய அனுப்பப்பட்டு பல இன்னல்களுக்கு ஆளானார். அதன் பிறகு இவர் திருத்தந்தையாகத் தேர்வு செய்யப்பட்டு, இவர் கி.பி. 217ஆம் ஆண்டு, கனிஸ்டஸ் உரோமையின் ஆயராகவும் திருத்தந்தையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் மிகவும் சாதாரண மற்றும் துன்பங்கள் நிறைந்த நிலையிலிருந்து இறைவனின் பணிக்காக உயர்த்தப்பட்ட ஒருவரின் வாழ்க்கையாகப் பார்க்கப்படுகிறது. இறைத்தந்தையின் வழியில் நடப்போருக்கு பலவிதமான சிக்கல்களும், பிரச்சனைகளும், கஷ்டங்களையும் நமது வாழ்வில் மகிழ்வோடு ஏற்று வாழும்போது நாமும் இறைவனுக்கேற்ற பிள்ளைகளாக வாழ்வோம் மாறுவோம் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவியர் அனைவரும் இறைவனின் ஞானத்துடனும் அன்புடனும் மக்களை வழிநடத்திடவும், அவர்களின் வாழ்வில் ஏற்படும் தடைகளை தூய ஆவியாரின் அருட்கொடைகளால் தகர்த்தெறிந்து நீரே உடனிருந்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று ஆண்டவரை உம்மை மன்றாடுவோம்.

2. நீதியின் அரசரே எம் இறைவா, உலகத் தலைவர்கள் அனைவரும் நீதி, நேர்மை, அமைதி மற்றும் சகோதரத்துவ உணர்வுடன் மக்களின் நலனுக்காக பணியாற்றிட தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம் என்ற எண்ணத்தை மறந்து, சுயநலத்தோடு வாழாமல் மக்களின் நலனுக்காகவே தாங்கள் அயராது உழைக்கக் கூடிய நல்ல மனதைத் தந்தருள இறைவா உம்மை ஆண்டவரை மன்றாடுவோம்.

3. மருத்துவர்களுக்கெல்லாம் மருத்துவரான எம் தந்தையே, இன்று

பலவிதமான நோயால், வறுமையால், தனிமையால் மற்றும் பல்வேறு துன்பங்களால் பாதிக்கப்பட்டுள்ள அனைவரும் இறைவனின் ஆறுதலையும் உதவியையும் பெற்று வாழ்வில் மகிழ்வினைக் கண்டுகளிக்க வரமருள வேண்டுமென்று ஆண்டவரை உம்மை மன்றாடுவோம்.

## இயேசுவின் (அவிலா நகர்) புனித தெரேசா

திருப்பலி
15.10.2026

### முன்னுரை

*திரு. ஜோசப் பெர்னார்ட்*

அன்பிற்கினிய இறைமக்களே, "கிறிஸ்துவில் இறைவனின் திருவுளத்தை உணர்ந்து, உள்ளார்ந்த உண்மையிலும் தூய்மையிலும் வாழ்வோம்" என்ற அழைப்பை இன்றைய இறைவார்த்தை நமக்கு முன்வைக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில், உலகம் தோன்றுமுன்பே இறைவன் நம்மைக் கிறிஸ்துவில் தேர்ந்தெடுத்து, நாம் அவரது திருமுன் தூயவர்களாகவும் மாசற்றவர்களாகவும் வாழ வேண்டுமென அழைத்திருப்பதைப் புனித பவுல் எடுத்துரைக்கிறார். மேலும், அனைத்தையும் கிறிஸ்துவில் ஒன்றிணைப்பதே இறைவனின் அன்புத் திட்டம் என்பதையும் அவர் நமக்கு உணர்த்துகிறார். நற்செய்தியில், வெளிப்புறத்தில் மட்டும் நீதிமான்களாகத் தோன்றி, உள்ளத்தில் உண்மையை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்களை இயேசு எச்சரிக்கிறார். இறைவன் விரும்புவது வெறும் வெளிப்புற பக்தியல்ல; மாறாக, உண்மையான மனமாற்றமும், நேர்மையான உள்ளமும், இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிந்த வாழ்வும் ஆகும்.

இன்று நாம் நினைவுகூரும் அவிலா நகர் புனித தெரேசா, இந்த இறைவார்த்தையின் அழைப்பைத் தனது வாழ்வில் ஆழமாக வாழ்ந்து காட்டியவர். இளமையிலேயே கார்மேல் துறவற வாழ்வைத் தேர்ந்தெடுத்து, அவிலாவில் உள்ள கார்மேல் மடத்தில் இணைந்த அவர், துறவற வாழ்வின் மையம் வெறும் ஒழுங்குகளும் வெளிப்புறக் கடமைகளும் அல்ல; மாறாக, இறைவனோடு ஆழமான தனிப்பட்ட உறவும் உள்ளார்ந்த மாற்றமும் என்பதை தனது ஆன்மிகப் பயணத்தில் உணர்ந்தார். செபம் என்பது வெறும் வார்த்தைகளால் சொல்வது அல்ல; நம்மை அன்பு செய்கிற இறைவனோடு கொண்ட நெருங்கிய நட்பு என்று புனித தெரேசா கற்றுத்தந்தார். மௌனம், தியானம், தியாகம், எளிமை, சகோதர அன்பு ஆகியவற்றின் வழியாக கிறிஸ்துவோடு ஆழமாக ஒன்றிக்க விரும்பினார்.

காலப்போக்கில், கார்மேல் துறவற வாழ்வு அதன் ஆரம்ப எளிமை, வறுமை மற்றும் செபத்தின் ஆழத்திலிருந்து விலகிக் கொண்டிருப்பதை உணர்ந்த அவர், தனது சொந்த வாழ்விலிருந்தே சீர்த்திருத்தத்தைத் தொடங்கினார். 1562-ஆம் ஆண்டு அவிலாவில் புனித யோசேப்பு மடத்தை நிறுவி, அதிக எளிமை, வறுமை, தனிமை, சகோதரத்துவம் மற்றும் தொடர்ந்த செபம் ஆகியவற்றை மையமாகக் கொண்ட புதுப்பிக்கப்பட்ட கார்மேல் வாழ்வுக்கு வழிவகுத்தார். பின்னர் புனித சிலுவை யோவானுடன் இணைந்து, பெண்கள் மட்டுமல்லாது ஆண்களிடையேயும் இந்த கார்மேல் சீர்த்திருத்தம் வளர

உதவினார். நற்செய்தியில் இயேசு கண்டிக்கும் வெளிப்புற பக்திக்கும் உள்ளார்ந்த வெறுமைக்கும் எதிராக, புனித தெரேசா "மாற்றம் முதலில் உள்ளத்திலிருந்து தொடங்க வேண்டும்" என்பதை தனது வாழ்வால் காட்டினார். திருஅவையைப் புதுப்பிக்க விரும்பிய அவர், முதலில் தனது இதயத்தை இறைவனிடம் முழுமையாக ஒப்படைத்தார்.

ஆழ்ந்த செப வாழ்வு, கிறிஸ்துவின்மீது கொண்ட அன்பு, எளிமையான கார்மேல் வாழ்வு, திருஅவையின் புதுப்பிப்பிற்கான துணிவு ஆகியவற்றால் அவர் பின்னாளில் திருஅவையின் மறைவல்லுநராக அறிவிக்கப்பட்டார். எனவே, இன்றைய திருப்பலியில் நாமும் புனித அவிலா தெரேசாவைப் போல வெளிப்புறச் செயல்களில் மட்டும் நின்றுவிடாமல், நமது உள்ளத்தை இறைவனுக்குத் திறந்து, அவரது திருவுளத்தைத் தேடி, செபத்தில் ஆழமடைந்து, உள்ளத்தில் மாற்றமடைந்து, வாழ்வில் கிறிஸ்துவுக்குச் சான்று பகர தேவையான அருளை வேண்டுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் அர்ப்பண வாழ்வில் ஈடுபட்டுள்ள அனைவரும், புனித தெரேசாவைப் போல ஆழ்ந்த செபத்தில் இறைவனின் திருவுளத்தை உணர்ந்து, உள்ளார்ந்த தூய்மையிலும் உண்மையிலும் நிலைத்து, திருஅவையின் ஆன்மிகப் புதுப்பிப்பிற்கான கருவிகளாக விளங்க அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

2. கார்மேல் துறவியர் உட்பட அனைத்து துறவற சபையினரும், தங்களது அழைப்பின் ஆரம்ப ஆர்வத்தைப் புதுப்பித்து, செபம், எளிமை, வறுமை, சகோதர அன்பு மற்றும் கிறிஸ்துவோடு ஒன்றித்த வாழ்வு ஆகியவற்றில் வளர அருள்பெற வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

3. இறைவனைத் தேடும் அனைவரும், புனித தெரேசாவைப் போல செபத்தை ஒரு கடமையாக மட்டும் கருதாமல், இறைவனோடு கொண்ட ஆழ்ந்த நட்பாக அனுபவித்து, மௌனத்திலும் தியானத்திலும் அவரது குரலைக் கேட்டு, அவரது திருவுளத்தின்படி வாழ அருள்பெற வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. அநீதி, பொய்மை மற்றும் போலித்தனம் நிறைந்த சூழல்களில் வாழும் அனைவரும், மனிதருக்கு அஞ்சாமல் உண்மையின் பக்கம் நிற்கவும், தங்களது சொற்களாலும் செயல்களாலும் கிறிஸ்துவுக்குச் சான்று பகரவும் இத்திருப்பலியில் பங்கேற்கும் நாம், நமது உள்ளத்தை நேர்மையோடு ஆராய்ந்து, மாற்றப்பட வேண்டியவற்றை இறைவனிடம் ஒப்படைத்து, புனித தெரேசாவைப் போல "இறைவன் ஒருவரே போதும்" என்ற நம்பிக்கையில் நிலைத்து, செபத்திலும் தூய வாழ்விலும் நாள்தோறும் வளர அருள்பெற வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

# அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார்

திருப்பலி
17.10.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்றைய தினத்தை புனித இஞ்ஞாசியாரின் திருப்பலியைச் சிறப்பிக்க நாம் ஒன்றுக்கூடியுள்ளோம். இவர் தொடக்கக் கால திருஅவையின் மிக முக்கியமான புனிதராவார். அந்தியோக்கியா நகரின் மூன்றாவது ஆயர். இயேசுவின் சீடரான புனித யோவானின் நேரடி சீடர். புனித பேதுருவுக்குப் பின் அந்தியோக்கியா திருஅவையை வழிநடத்திய பெருமை இவருக்கு உண்டு. "இஞ்ஞாசியார் என்ற பெயர் கிரேக்கத்தில் "தியோபோரஸ்" என்றும் "கடவுளை தாங்குபவர்" என்றும் பொருள் கூறுகிறது. உரோமை பேரரசன் "திராயான்" காலத்தில் கிறிஸ்தவ நம்பிக்கைக் காரணமாக இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அந்த தண்டனை நிறைவேற்றப்படுவதற்காக அழைத்துச் சென்றபோது பல்வேறு கிறிஸ்தவ சபைகளுக்கு ஏழு புகழ்பெற்ற கடிதங்களை எழுதினார். அவற்றின் முக்கிய கருத்துக்கள் - **1. ஒற்றுமை:** கிறிஸ்தவர்கள் அனைவரும் தங்களின் ஆயர்கள், குருக்களுக்குக் கீழ்ப்படிந்து ஒற்றுமையாக இருக்க வேண்டும். **2. போலிப் போதனைகளுக்கு எதிர்ப்பு:** கிறிஸ்துவின் மனிதத்தன்மையும், அவரது பாடுகளையும் மறுத்த போலிப் போதகர்களை கடுமையாக எதிர்த்தார். **3. நற்கருணை :** நற்கருணையை "அழியாமையின் மருந்து" என்று விவரித்தார்.

முதன் முதலாக "கத்தோலிக்க திருஅவை" என்ற சொல்முறையை பயன்படுத்தியவர் இவர்தான். சுமார் கி.பி. 35ல் பிறந்து சுமார் 107-108 ஆண்டுக்குள் உரோமை கொலோசியம் அரங்கில் கொடிய மிருகங்களுக்கு இறையாக்கப்பட்டு மறைச்சாட்சியாக கொல்லப்பட்டார். இவர் மகிழ்ச்சியோடு கூறிய புகழ்பெற்ற வார்த்தைகள்: "நான் கிறிஸ்துவின் கோதுமை மணி, காட்டு மிருகங்களின் பற்களால் நான் அரைக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குகந்த தூய அப்பமாக மாறுவேனாக" என்று இறப்பதற்குமுன் கூறினார்.

இன்றைய 2ம் வாசகமும் நற்செய்தியும் நமக்கு கூறுவது, கிறிஸ்துவின் ஆற்றலை அவரை செயல்படுத்தியதின் மூலமாகவும், இறந்து உயிர் பெற்றலையும், உணர்ந்து மகிமைப்படுத்தவும் அவர்மீது நம்பிக்கை வைக்கவும், வாழ்க்கையில் ஏற்படும் அனைத்து பிரச்சினைகளிலும், நம்மை உடனிருந்து வழிநடத்தும் தூய ஆவியானரையும் அவரை பழித்துரைப்பவர் எந்நாளும் மன்னிப்பு பெறமாட்டார் என்ற வெளிப்பாட்டையும் நமக்கு அளிக்கிறது. எனவே இறையேசுவை பின்பற்றி இறைவனின் தூதர்கள் முன்னிலையில் மன்னிப்புப்பெற இந்நேரத்தில் உறுதிக்கொண்டவர்களாக இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையின் தலைவர்களான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள்,

குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரும் தமது இறைநம்பிக்கையிலும், கடமையிலும், தவறாமல் இயேசுவின் போதனைகளை கடைப்பிடித்து, தங்களின் கடமைகளைச் செய்யும்போது ஏற்படும் தடைகளை தூய ஆவியாரின் துணையோடு வென்றிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உம்மை நம்பிவந்தோரை கைவிடாதப்படி நடத்துபவரே, இன்று பலர் போரினாலும், இயற்கை பேரழிவினாலும், வன்முறையினாலும், பழிவாங்கும் எண்ணத்தில் பல உயிர்களை அழிப்பவர்களையும் உமது கரம் ஒப்புவிக்கிறோம். இவர்களின் இத்தீய எண்ணங்களையும் உள்ளங்களையும் மாற்றி, அனைவரையும் அன்பு செய்து ஒற்றுமையோடு வாழும் பரந்த உள்ளத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பிற்கு இலக்கணமானவரே எம் இறைவா, இன்று பல குடும்பங்களில் ஒற்றுமையின்மை, ஒருவரையொருவர் புரிந்துக்கொள்ளாமை, விட்டுக்கொடாமை, சுயநல வாழ்க்கை வாழ்வோர் அனைவரையும் உமது அருட்கரத்தால் ஆசீர்வதித்து, வாழ்வின் அர்த்தங்களைப் புரிந்து உமது அடிச்சுவட்டை பின்பற்றி நாளும் உமக்கு சாட்சிய வாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



## பொதுக்காலம் 29வது ஞாயிறு

திருப்பலி
18.10.2026

### முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

*I. எசா. 45: 1.4-6 II. 1தெச. 1: 1-5 மத். 22: 15-21*

இறையேசுவின் இறைச்சமூகமே, இன்றைய முதல் வாசகத்தில் இறைவன் சைரசு மன்னனை தமது கருவியாகப் பயன்படுத்துகிறார். சைரசு இஸ்ரயேலரின் அரசன் அல்ல, இருந்தாலும் இறைவன் தமது திட்டத்தை நிறைவேற்ற அவரைப் பயன்படுத்துகிறார். ஆண்டவர் இஸ்ரயேலரின் கடவுள் மட்டுமல்ல, அனைத்து மக்களினங்களுக்கும் ஆண்டவர் என்று தன்னை வெளிப்படுத்துகிறார்.

புனித பவுல் தெசலோனிக்க திருஅவையினரை நினைத்து நன்றி செலுத்துகிறார். அவர்களுடைய நம்பிக்கை, அன்பு, நம்பிக்கையுடனான பொறுமை ஆகியவற்றைப் பாராட்டுகிறார். கிறிஸ்தவ வாழ்வு என்பது நம்பிக்கை நிறைந்த வாழ்வுமுறை, அன்பினால் உந்தப்பட்ட உழைப்பு, கிறிஸ்துவில் நம்பிக்கையுடன் பொறுமையாக இருப்பது, துயரிலும் மனஉறுதியான நிலைப்பாடு ஆகும். நற்செய்தியில் இயேசுவிடம் பரிசேயர்கள், சீசருக்கு வரி கொடுப்பது முறையா? இல்லையா? என்று கேட்கின்றனர். இது ஒரு சாதாரணக் கேள்வியல்ல, இயேசு "கொடுக்க வேண்டுமென்றால் உரோமை ஆட்சியை ஆதரிப்பதாக குற்றம் சாட்டலாம். "கொடுக்கக் கூடாது"

என்றால் அரசுக்கு எதிரானவர்" என்று குற்றம் சாட்டலாம். ஆனால் இயேசு பரிசேயர்களின் சூழ்ச்சியை அறிந்து, "சீசருக்குரியதைச் சீசருக்கும் கடவுளுக்குரியதை கடவுளுக்கும் கொடுங்கள்" என்று கூறுகிறார்.

இயேசு கடவுளையும் உலக அதிகாரத்தையும் சமமாக்கவில்லை. உலகில் நாம் குடிமக்களாக கொண்டுள்ள கடைமைகளை நேர்மையாக நிறைவேற்ற வேண்டும். சட்டத்தை மதித்தல், சமூகப்பொறுப்பு, பிறருடைய உரிமைகளை மதித்தல் போன்றவை நமது கடமைகள். ஆனால் நமது முழுமையான வாழ்க்கையும் இதயமும் இறைவனுக்கே உரியது. உலகக் கடமைகளைச் செய்யுங்கள். ஆனால் உங்கள் இதயத்தையும் வாழ்க்கையும் இறைவனுக்கே அர்ப்பணியுங்கள். நாம் நல்ல குடிமக்களாகவும் நல்ல கிறிஸ்தவர்களாகவும் வாழ இத்திருப்பலியில் வரம் வேண்டி மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அடைக்கலமும் ஆற்றலுமாய் உள்ள கடவுளே, திருஅவையின் தூண்களாக இருந்து செயல்படும் எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவிகள் மற்றும் இறைமக்கள் நம்பிக்கையிலும், அன்பிலும் வளர்ந்து உலகிற்கு கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதியையும், நேர்மையையும் உம் அரியணைக்கு அடித்தளமாக இருப்பவரே, உலகின் அனைத்து அரசியல் தலைவர்களும் தங்களின் அதிகாரத்தை சுயநலத்திற்காக அல்லாமல் நீதி, நேர்மை, சமாதானம், உண்மை, சமத்துவம், குறிப்பாக ஏழைகளின் நலனில் அக்கறைக்கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. கொடைகளின் வள்ளலே எம் இறைவா, எம் பெற்றோர்களை உமக்கு அர்ப்பணிக்கின்றோம். கடவுளுடையதைக் கடவுளுக்குக் கொடுங்கள் என்று கூறியவரே, இயேசுவின் வார்த்தையை மனதில் கொண்டு நமது நேரம், திறமை, செல்வம், வாழ்க்கை அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணித்து நற்செயல்களில் சிறந்து விளங்க பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. மருத்துவர்களுக்கெல்லாம் மருத்துவரான எம் இறைவா, என் நோய்களையெல்லாம் குணமாக்குபவரே, பலவிதமான நோய்களினால் அவதிப்படுவோர், தனிமையில் தவிப்போர், மனநோயினால், குழப்பத்தில் வாடுவோர், கடன்சுமையினால் புலம்புவோர் அனைவருக்கும் நீரே ஆறுதலையும், நம்பிக்கையையும் வழங்கவும், அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்படுத்தும் பரந்த உள்ளத்தை அவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# புனித இரண்டாம் ஜான்பால்

திருப்பலி
22.10.2026

## முன்னுரை

*திரு. தொன் போஸ்கோ*

அன்பிற்கினிய இறைமக்களே! இன்றைய திருப்பலி வாசகங்கள், நமது உள்ளத்தில் கிறிஸ்துவின் அன்பு வேரூன்றி வளர வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. அந்த அன்பு நமது வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். கிறிஸ்தவ வாழ்வு என்பது வெறுமனே சில சமயச் சடங்குகளை நிறைவேற்றுவது அல்ல; மாறாக, கிறிஸ்துவை நமது உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு, அவருடைய அன்பினால் நமது உள்ளமும் வாழ்வும் ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

இன்று உலக மக்கள் பெரும்பாலோர் காட்டும் அன்பு வெறும் வெளியடையாளமாக மட்டுமே இருக்கின்றது. நம் மனதில் அன்பு இல்லாவிடில் பிறரை நாம் நமக்குப் பயன்படும் பொருளாகவே காண்கிறோம். நமது தேவை முடிந்துவிட்டால் தூக்கி எறியக்கூடிய பொருள்களாகவே அவர்களை நினைக்கிறோம். நம்முடைய உள்ளத்தில் அன்பு இருந்தால் மட்டுமே நம்மால் மனிதர்களை மனிதர்களாகக் காணவும், அன்பான உறவுமுறையை வளர்க்கவும் முடியும். அன்பே மனித உறவுகளின் அடிப்படை என்பதை இயேசு நற்செய்தியில் தெளிவுப்படுத்துகிறார். இயேசு, "நான் பூமியில் தீ மூட்ட வந்தேன்; அது ஏற்கெனவே பற்றியெரிய வேண்டும் என்று விரும்புகிறேன்" என்கிறார். இங்கு இயேசு குறிப்பிடும் தீ, அழிவின் தீ அல்ல; அது இறைவனின் அன்பு, உண்மை, நீதியின் தீ. அந்தத் தீ நமது உள்ளத்தில் பற்றியெரியும்போது, பழைய வாழ்க்கை முறைகள், சுயநலம், அநீதி, பொய், வெறுப்பு ஆகியவை நம்மிடமிருந்து ஒவ்வொரு நாளும் அகற்றப்பட வேண்டும்.

இன்றைய திருப்பலியில் பங்கேற்கும் நாம் ஒவ்வொருவரும் நம்மையே கேட்டுக்கொள்வோம்: கிறிஸ்துவின் அன்பு உண்மையிலேயே என் உள்ளத்தில் வேரூன்றியுள்ளதா? இறைவனின் உண்மைக்காக நான் துணிவுடன் நிற்கிறேனா? என்னுள் பற்றியெரியும் கிறிஸ்துவின் அன்பு, என் குடும்பத்திலும் சமூகத்திலும் பிறரின் வாழ்விலும் ஒளியாகத் திகழ்கிறதா? இத்தகைய ஆழமான விசுவாசத்தையும், நம்பிக்கையையும், உண்மைக்கான துணிவையும், அனைவரையும் அரவணைக்கும் கிறிஸ்தவ அன்பையும் வாழ்ந்துகாட்ட இறைவனிடம் வேண்டுவோம். நமது உள்ளங்களில் கிறிஸ்துவின் அன்பு வேரூன்றி, அந்த அன்பின் தீ நமது குடும்பங்களிலும் சமூகத்திலும் பற்றியெரிய வேண்டுமென்றும்; பிறர்மீது நாம் கொண்டிருக்கும் அன்பின் அடையாளமாக அவர்களோடு இணைந்து பக்தியுடன் திருப்பலியில் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பின் அடித்தளமே எம் இறைவா, திருஅவையின் தலைவர்களாகிய திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும்

திருநிலையினர் அனைவரையும் உமது பாதம் சமர்ப்பிக்கின்றோம். உமது வழித்தோன்றல்களான இவர்கள் தங்களின் பணிவாழ்வில் மக்களிடம் உமது அடிச்சுவடுகளைப்பின்பற்றி மக்களை நல்வழியில் நடத்திட உமது தூய ஆவியின் அருட்கொடைகளை நிறைவாகப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பாதுகாப்பின் பரம்பொருளே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்களை உம்மிடம் ஒப்படைக்கின்றோம். இவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம் என்பதை நினைவில் கொண்டு, மக்களுக்குத் தேவைகளை உணர்ந்து, ஏற்றத்தாழ்வுகள், பாகுபாடுகளைக் களைந்து, அனைவருக்கும் சமமான பங்களிப்பை அளித்து நல்வழியில் நடத்தியருள தாராள உள்ளம் கொண்டவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. குடும்பங்களின் பாதுகாவலரே, எங்கள் குடும்பங்களில் அன்பும், ஒற்றுமையும், மன்னிப்பும், சமாதானமும் நிலவவும், குடும்பங்களில் நோயினால் அவதிப்படுவோர், பிள்ளைகளால் தனிமைப்படுத்தப்பட்டோர், துயரப்படுவோர் அனைவருக்கும் நீரே ஆறுதலாகவும், நம்பிக்கையுமாக இருந்து, ஒருவரையொருவர் முழுமையாகப் புரிந்துக்கொண்டு வாழ உமது தூய ஆவியாரின் அருட்கொடைகளை நிறைவாகப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. இன்றைய குழந்தைகள், இளைஞர்கள் நாளைய தலைமுறையினர் என்பதை உணர்ந்து, நல்ல மதிப்பீடுகளுடன் வளர்ந்து, தங்கள் வாழ்வில் இறைவனின் அழைப்பைக் கண்டறிந்து, குடும்பத்திற்கும், திருஅவைக்கும், நாட்டிற்கும் பயனுள்ளவர்களாகவும், உமது இறையழைத்தலுக்கு செவிசாய்த்து நற்செய்திப் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் ஆர்வத்தை இவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## புனித அந்தோணி மரிய கிளாரெட்

திருப்பலி
24.10.2026

### முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்று நம் திருஅவை புனித அந்தோணி மரிய கிளாரெட் என்னும் பேராயரை சிறப்பிக்க அழைத்துள்ளது. இவர் 1807, டிசம்பர் 23ம் நாளில் ஸ்பெயினிலுள்ள "கட்டலோனிய" என்னும் ஊரில் "சல்லியந்து" என்னும் இடத்தில் பிறந்தவர். 12வயதுமுதல் 20வயதுவரை நெசவுத்தொழிலில் இருந்தவர். அதில் மிகவும் சிறப்பு பயிற்சிப் பெற்றவர். ஓய்வு நேரங்களில் இலத்தீன், பிரஞ்சு மொழிகளை கற்றார். சமய வாழ்வில் நாட்டம் கொண்டு கிறிஸ்தவ பள்ளியில் பயின்று வேதவியல் கற்று, 1835 ஜூன் 13ல் குருப்பட்டம் பெற்றார். பின் கட்டலோனியாவிலும், கனேரி, தீவுகளிலும்

மறைப்போதக பணி பயணங்களை கால்நடையாகவே மேற்கொண்டவர். ஊடகத்துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து சில குருக்களோடு சேர்ந்து கத்தோலிக்க அச்சகம் ஒன்றை நிறுவி, பல புத்தகங்களையும் துண்டு பிரசுரங்களையும் வெளியிட்டவர்.

பின்னர் 1949 ஜூலை 16ம் நாள் 5 குருக்களோடு சேர்ந்து இன்று, கிளரீசியன் சபையாக விளங்கும் "அமலமரியின் மறைப்போதக மைந்தர்கள்" என்ற சபையை நிறுவினார். "பார்சிலோனாவில்" மிகப் பெரிய சமய நூலகம் ஒன்றை நிறுவினர். இன்று இது "கிளாரட்" நூலகம் என்று அழைக்கப்படுகிறது. இறையன்பை முக்கியமாக ஏழைகளுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் வெளிப்படுத்தியவர் இவர். தனது 63வது வயதில் 1870 அக்டோபர் 24ல் இறையடிச் சேர்ந்தார்.

திருத்தந்தை பதினோராம் பயஸ்1934 பிப்ரவரி 25ல் அருளாளர் பட்டம் கொடுத்தார். பின் திருத்தந்தை 12ம் பயஸ் அவர்களால் 1950 மே 7ல் புனிதர் பட்டம் அளிக்கப்பட்டது. இப்புனிதர் நெசவாளிகளின் பாதுகாவலராகின்றார். ஆகவே, இத்தகைய புனிதர்களால் திருஅவை எல்லாவிதத்திலும் நிறைவு பெற்று இயேசுவின் இறைமாட்சி உலகெங்கும் அறிவிக்கப்பட கூடிய நிலையை நாமும் மனதார நினைத்து இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையின் தூணாக இருந்து செயல்படும் எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் தம் முதல் பணியான நற்செய்திப் பணியை உலகெங்கும் சென்று மக்களுக்கெல்லாம் அறிவிக்க போதுமான மனஉறுதியையும், நம்பிக்கையையும், பாதுகாப்பையும் அளித்து தூய ஆவியாரின் அருட்கொடைகளை நிறைவாக பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நற்செய்தியின் நாயகரே எம் இறைவா, "அறுவடையோ மிகுதி வேளையாட்களோ குறைவு" என்ற இறைவாக்கின்படி பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை குருத்துவ வாழ்விற்கு கையளிக்கும் தாராள உள்ளத்தை அவர்களுக்கு அளித்து, திருஅவையை கட்டியெழுப்பும் பரந்த மனம் கொண்டவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாப்பின் பெட்டகமே எம் இறைவா, எம் இளைஞர்களை உமது பாதம் ஒப்படைக்கின்றோம். வளரும் இளம் தலைமுறையினர் சிறுவயது முதல் மறைக்கல்விக்கு சென்று இறையேசுவை தன்னுள்ளத்தில் ஏற்று, அவரின் போதனைகளை வாழ்வில் கடைப்பிடித்து நடக்கவும், நல்லொழுக்கங்களை அறிந்து அதன்படி செயல்படும் பிள்ளைகளாக வளர உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 30வது ஞாயிறு

திருப்பலி
25.10.2026

## முன்னுரை

*திரு. தொன் போஸ்கோ*

I. *விப. 22: 21-27* II. *1தெச. 1: 5-10* *மத். 22: 34-40*

அன்பிற்கினிய இறைமக்களே! இன்றைய இறைவார்த்தை, நமது கிறிஸ்தவ வாழ்வின் மையமான அன்பின் கட்டளையை நமக்கு நினைவூட்டுகிறது. இன்றைய முதல் வாசகத்தில், விடுதலைப்பயண நூல், அந்நியர், விதவை, அனாதை போன்ற சமூகத்தில் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பவர்களை ஒடுக்கவோ துன்புறுத்தவோ கூடாது என்று இறைவன் இஸ்ரயேல் மக்களுக்கு அறிவுறுத்துகிறார். ஏனெனில் இறைவனுடைய பார்வையில் ஏழைகள், எளியோர், கைவிடப்பட்டோர், பாதுகாப்பற்றோர் ஆகியோரின் கண்ணீர் மிகவும் முக்கியமானது. இரண்டாம் வாசகத்தில், திருத்தூதர் பவுல் தெசலோனிக்கர் மக்களின் விசுவாசத்தையும் அன்பையும் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடுகிறார். அவர்களுடைய விசுவாசம் செயலிலும், அன்புகலந்த உழைப்பிலும், கிறிஸ்துவின்மீதான நம்பிக்கையிலும் நிலைத்திருப்பது வெளிப்பட்டது. இதனால் அவர்களின் வாழ்க்கை பிறருக்கும் ஒரு நல்ல சாட்சியாக மாறியது.

இன்றைய நற்செய்தியில், இயேசுவிடம் "திருச்சட்டத்தில் தலைசிறந்த கட்டளை எது?" என்று கேட்கப்படுகிறது. அதற்கு இயேசு, "உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு அறிவாற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்புகூர்வாயாக" என்றும், "உன்மீது நீ அன்புகூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்புகூர்வாயாக" என்றும் கூறுகிறார். இந்த இரண்டு கட்டளைகளில்தான் திருச்சட்டமும் இறைவாக்கினர்களின் போதனைகளும் அடங்கியுள்ளன என்கிறார். இறைவனை அன்பு செய்கிறோம் என்று கூறிவிட்டு, நம்மைச் சுற்றியுள்ளவர்களை வெறுப்பதும், புறக்கணிப்பதும், துன்பப்படுத்துவதும் கிறிஸ்தவ வாழ்வாக இருக்க முடியாது. குறிப்பாக ஏழைகள், முதியோர், நோயுற்றோர், தனிமையில் இருப்போர், ஆதரவற்றோர், சமூகத்தால் ஒதுக்கப்பட்டோர் ஆகியோரில் கிறிஸ்துவின் முகத்தைக் காண அழைக்கப்படுகிறோம்.

இறைவன்மீது கொண்ட அன்பு, பிறர்மீது நாம் காட்டும் அன்பில் வெளிப்படுகிறதா? நம்மைச் சுற்றியுள்ளவர்கள் துன்புறும்போது அவர்களுடைய குரலை நாம் கேட்கிறோமா? நம் குடும்பங்களிலும் சமூகத்திலும் அன்பையும் இரக்கத்தையும் நீதியையும் வளர்க்க நாம் என்ன செய்கிறோம்? இறைவனின் அன்பை ஏற்றுக்கொண்டு, அந்த அன்பை நமது வாழ்வின் மூலம் பிறருடன் பகிர்ந்துகொள்ளும் மக்களாக மாறுவோம். அதற்காக இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையை வழிநடத்திவரும் எம் திருத்தந்தையை உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம். அவரோடு இணைந்து ஒத்துழைக்கும் அனைத்து நல்லுள்ளங்களையும், ஆசீர்வதியும். இவர்கள் அனைவரும் தூய ஆவியின் வழிகாட்டுதலுடன் இறைநம்பிக்கையில் நிலைத்து உலகில் கிறிஸ்துவின் அன்பையும், அமைதியையும் எடுத்துரைக்கும் சாட்சிகளாக தாங்கள் என்றும் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. உலகில் நிலவும் போர்கள், வன்முறைகள், வெறுப்பு, மற்றும் பிளவுகளால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் அமைதி நிலவவும், நாட்டுத் தலைவர்கள், அரசு அதிகாரிகள் அனைவரும் தாங்கள் மக்களின் நலனுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம் என்பதை மனதில் நிறுத்தி, நீதியோடும், நேர்மையோடும், ஏற்றத்தாழ்வுகளின்றி அனைவரின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்பட வரமருள வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. பங்குகளில் இருக்கும் அனைத்துக் குருக்களையும், பங்கு மக்களையும் உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம். பங்கிலுள்ள குருக்கள் இறைவார்த்தையை எளிதான முறையில் மக்களுக்கு எடுத்துரைக்கவும் மக்களும் அதைப் பின்பற்றி வாழ தேவையான இறைஞானத்தை அளித்து வழிநடத்தும்படி உம்மை மன்றாடுகிறோம்.

4. மருத்துவர்களுக்கெல்லாம் மருத்துவரே எம் இறைவா, பலவிதமான நோயினால் அவதிப்படுவோர், முதியோர், தனிமையில் இருப்போர், துயரப்படுவோர் ஏழைகள் மற்றும் பல்வேறு துன்பங்களை அனுபவிப்போர் அனைவருக்கும் ஆறுதலும், குணமளிக்கும் நல் ஆதரவையும் உம் பிள்ளைகளுக்கு பெற்றுத்தந்தருளவும், நீரே அவர்களின் உற்ற நண்பராக உடனிருந்து வாழ்வளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# புனிதர்கள் சீமோன், யூதா, திருத்தூதர்கள் விழா

திருப்பலி
28.10.2026

## முன்னுரை

*திரு. ஜோசப் பெர்னார்ட்*

அன்பிற்கினிய இறைமக்களே, "கிறிஸ்துவில் வேரூன்றி, அவரது அழைப்பைப் பெற்று, நற்செய்திக்குச் சாட்சிகளாக வாழ்வோம்" என்ற அழைப்பை இன்றைய இறைவார்த்தை நமக்கு முன்வைக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில் புனித பவுல், நாம் இனி அந்நியர்களோ வெளிநாட்டவர்களோ அல்ல; இறைமக்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறுகிறார். இந்த இறைக்குடும்பமாகிய திருஅவை, திருத்தூதர்கள் மற்றும் இறைவாக்கினர்களின் அடித்தளத்தின்மேல் கட்டப்பட்டுள்ளது;

கிறிஸ்து இயேசுவே அதன் மூலைக்கல். அவரில்தான் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இறைவனின் உறைவிடமாக வளர்கிறோம்.

நற்செய்தியில் இயேசு, தமது பன்னிரு திருத்தூதர்களைத் தேர்ந்தெடுப்பதற்குமுன் மலையின்மேல் சென்று இரவு முழுவதும் செபிக்கிறார். அந்தத் தேர்வில் புனித சீமோனும் புனித யூதாவும் இடம் பெறுகின்றனர். இதன் மூலம், ஒவ்வொரு இறையழைப்பும் செபத்தில் பிறக்கிறது என்பதையும், தேர்ந்தெடுக்கப்படுவது பெருமைக்காக அல்ல; இறைப்பணிக்காக அனுப்பப்படுவதற்காக என்பதையும் நாம் உணர்கிறோம். புனித சீமோன் நற்செய்தியில் "தீவிரவாதியாகிய சீமோன்" என்று அழைக்கப்படுகிறார். தீவிரவாதத்தின் வழியே இறைவனின் ஆட்சியை அமைக்க தன் வழியில் முயன்ற இவர், கிறிஸ்துவுடனான தனது சந்திப்பின் பிறகு, அன்பின் வழியை தேர்ந்தெடுத்து, இறையாட்சிக்கென மறைசாட்சியாய் தன் உயிரை விடுகிறார். திருஅவை மரபில் அவர் சில கைவினைத் தொழிலாளர்களின் பாதுகாவலராகவும் போற்றப்படுகிறார்.

புனித யூதா, ததேயு என்றும் அறியப்படுகிறார். குறிப்பாக நம்பிக்கையற்றதாக தோன்றும் கடினமான சூழ்நிலைகளில் அவரது பரிந்துரையை நாடும் பக்தி வளர்ந்ததால், அவர் நம்பிக்கையற்ற சூழ்நிலைகளின் பாதுகாவலராக சிறப்பாகப் போற்றப்படுகிறார். எந்தச் சூழ்நிலையிலும் இறைவனில் நம்பிக்கையை இழக்கக் கூடாது என்பதை அவரது வாழ்வு நமக்கு நினைவூட்டுகிறது.

இந்த இரு திருத்தூதர்களைப் பற்றிய செய்திகள் குறைவாக இருந்தாலும், அவர்களின் வாழ்வு தெளிவான ஒரு செய்தியைத் தருகிறது: அவர்கள் இயேசுவால் அழைக்கப்பட்டார்கள், அவரோடு இருந்தார்கள், பின்னர் நற்செய்தியை அறிவிக்க அனுப்பப்பட்டார்கள். அவர்களின் வலிமை தனிப்பட்ட புகழில் அல்ல; கிறிஸ்துவோடு கொண்ட உறவில்தான் இருந்தது. நாமும் திருமுழுக்கின் வழியாக இதே இறைக் குடும்பத்தில் இணைக்கப்பட்டு, நமது குடும்பம், திருஅவை, பணியிடம் மற்றும் சமூகத்தில் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். எனவே இன்றைய திருப்பலியில், கிறிஸ்துவை நமது வாழ்வின் மூலைக்கல்லாகக் கொண்டு, செபத்தில் அவரது குரலைக் கேட்டு, நமக்குக் கொடுக்கப்பட்ட இறைப்பணியை நம்பிக்கையுடனும் துணிவோடும் நிறைவேற்ற, புனிதர்கள் சீமோன் மற்றும் யூதாவின் பரிந்துரையை நாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் அர்ப்பண வாழ்வில் ஈடுபட்டுள்ள அனைவரும், திருத்தூதர்களைப் போல கிறிஸ்துவில் வேரூன்றி, செபத்தில் இறைவனின் திருவுளத்தை உணர்ந்து, இறைமக்களை ஒன்றிணைத்து, நற்செய்திக்குத் துணிவுடன் சாட்சிகளாக வாழ அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

2. உலகின் பல பகுதிகளில் நற்செய்தியை அறிவிக்கும் மறைப்பணியாளர்கள், மறைக்கல்வியாளர்கள் மற்றும் பொதுநிலையினர், புனிதர்கள் சீமோன் மற்றும் யூதாவைப் போல தங்களுக்குக் கொடுக்கப்பட்ட இறைப்பணியை நம்பிக்கையுடனும் துணிவோடும் நிறைவேற்றி, தங்கள் வாழ்வால் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாகத் திகழ அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்க்கையின் சோதனைகள், நோய்கள், குடும்பப் பிரச்சினைகள் மற்றும் பல்வேறு துன்பங்களால் நம்பிக்கையிழந்து தவிக்கும் அனைவரும், புனித யூதாவின் பரிந்துரையால் இறைவனில் நம்பிக்கையை இழக்காமல், அவரது அன்பிலும் அருளிலும் புதிய நம்பிக்கையைப் பெற அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. இத்திருப்பலியில் பங்கேற்கும் நாம் ஒவ்வொருவரும், கிறிஸ்துவை நமது வாழ்வின் மூலைக்கல்லாகக் கொண்டு, செபத்தில் அவரது குரலைக் கேட்டு, நமது குடும்பம், திருஅவை, பணியிடம் மற்றும் சமூகத்தில் அன்பு, ஒன்றிப்பு மற்றும் நம்பிக்கையின் கருவிகளாக வாழ அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.



# அருளாளர் தொன் மைக்கேல் ரூவா

திருப்பலி
29.10.2026

## முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

இன்றைய திருப்பலியில் அருளாளர் தொன் மைக்கேல் ரூவா அவர்கள் நினைவு கூறப்படுகிறார். இவர் புனித தொன் போஸ்கோவின் நெருங்கிய நண்பரும் சீடரும், சலேசிய சபையின் முதல் வாரிசும் ஆவார். இவர் இளைஞர்களின் கல்வி, ஆன்மீக வளர்ச்சி மற்றும் இறையழைத்தலுக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்து வந்தார். இவர் 1837ஜூன் 9ம் தேதி இத்தாலி தேசத்தில் தூரின் என்ற இடத்தில் பிறந்தார். இவர் தனது 15ம் வயதில் புனித தொன் போஸ்கோவின் வால்தொக்கோ ஆரட்டரியில் சேர்ந்தார். தொன்போஸ்கோவுடன் 36 ஆண்டுகள் பணியாற்றி சலேசிய சபையின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டார். 1855ம் ஆண்டு தனது துறவற வாக்குறுதியை ஏற்றார். 1860ம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். "இளைஞர்களை இறைவனிடம் அழைத்துச்செல்வது" என்ற சலேசியச் சபையின் விருதுவாக்கினை தன் வாழ்வில் நடைமுறைப்படுத்தினார். இவருடைய தலைமையில் சலேசியப் பணி உலகம் முழுவதும் வேகமாகப் பரவியது. இவர் அன்பும், தந்தைக்குரிய கனிவும் கொண்டவராக விளங்கினார். இவரது முக்கியப் பண்புகள்: இறைவன்மீதுள்ள ஆழமான நம்பிக்கை, இளைஞர்கள்மீது அன்பு, எளிமையான வாழ்வு, கடின உழைப்பு, உலகம் முழுவதும் சலேசியச் சபையை பரப்புதல், கீழ்ப்படிதலாகும். இவர் 1960ம் ஆண்டு ஏப்ரல் 6ம் நாள் தனது 73ம் வயதில் இறையடிச் சேர்ந்தார். திருத்தந்தை 6ம் பவுல் 1972ம் ஆண்டு இவரை அருளாளராக உயர்த்தினார். இவருடைய

நினைவுநாள் அக்டோபர் 29ம் தேதி கொண்டாடப்படுகிறது. இவரிடம் விளங்கிய எளிமையான வாழ்வு, தாழ்ச்சிக் கீழ்ப்படிதல் போன்ற பண்புகள் நமது இளைஞர்களிடமும் நிலவ வேண்டுமென்று இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அமைதியான நீர்நிலைகளுக்கு அழைத்துச் செல்பவரே, திருஅவை உலகில் கிறிஸ்துவின் உண்மையான சாட்சியாகத் திகழவும், அரசியல் அதிகாரங்களையும், சமூக அமைப்புகளையும் தாண்டி இறைவனுக்குரிய உண்மை, நீதி, அன்பு, சமத்துவம் ஆகியவற்றை துணிவுடன் எடுத்துரைக்கவும், திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் பொதுநிலையினர் அனைவரையும் தூய ஆவியானவர் வழியில் நடந்திட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. எங்களுக்கு அருளையும், மேன்மையையும் அளிப்பவரே, பொறுப்பான பதவிகளில் இருப்போர் அதிகாரத்தை தங்களுடைய பெருமைக்காகவோ, சுயநலத்திற்காகவோ பயன்படுத்தாமல் ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், ஆதரவற்றோர் மற்றும் பின்தங்கிய மக்களின் நலனுக்காக நேர்மையுடன் பணியாற்ற ஆண்டவர் அவர்களுக்கு நல்ல ஞானத்தையும், மனசாட்சியையும் அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. என்னை பாதுகாக்கும் வலிமைமிகு கோட்டையானவரே, எங்கள் இளைஞர்கள், உமது அரிய கொடை என்பதை உணரச் செய்தருளும். அவர்களின் கனவுகளுக்கு நல்ல வழியையும், அவர்களின் முயற்சிகளுக்கு வெற்றியையும் வாழ்க்கைக்கு முழுமையான அர்த்தத்தையும் தந்து, தொன் மைக்கேல் ரூவாவின் தாழ்மையான சேவையுள்ளத்தை எம் இளைஞர்களும் பெற்று வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



பகுதி-2

# நம்பிக்கையில் வளர...



# இறைவன் தந்த
# வானத்தூதர்கள்

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

**வானதூதர்கள் யார்? :** வானதூதர்கள் இறைவனால் படைக்கப்பட்ட ஆவிக்குரிய உயிரினங்கள். அவர்களுக்கு உடல் இல்லை; அவர்கள் அறிவும் விருப்பமும் கொண்ட ஆவிகள். அவர்கள் இறைவனைப் போற்றவும், அவரது திட்டத்தில் பங்கேற்கவும், மனிதர்களுக்கு இறைவனின் செய்தியை எடுத்துச் செல்லவும் படைக்கப்பட்டவர்கள். வானதுாதர்கள் கடவுளுக்கு இணையானவர்கள் அல்ல. அவர்கள் படைப்புகள்; இறைவன் மட்டுமே படைப்பாளர். அவர்கள் இறைவனைவிட உயர்ந்த சக்திகளும் அல்ல. அவர்களின் வலிமையும் அதிகாரமும் இறைவனிடமிருந்தே வருகிறது. வானதுாதர்களைப் பற்றிய நமது பார்வை எப்போதும் இறைவனை நோக்கியதாக இருக்க வேண்டும்.

வானதூதர்கள் இறைவனைப் போற்றுகிறார்கள். வானதூதர்களின் முதன்மையான பணி இறைவனைப் போற்றுவது. திருப்பலியில் நாம், "தூயவர், தூயவர், தூயவர்" என்று பாடும்போது, வானதூதர்களோடு இணைந்து இறைவனைப் புகழ்கிறோம். நாம் தனியாக இறைவனை வழிபடுவதில்லை. வானுலகத்தோடும் இணைந்து இறைவனைப் புகழ்கிறோம்.

வானதூதர்கள் இறைவனின் செய்தியை எடுத்துச் செல்கிறார்கள். "Angel" என்ற வார்த்தைக்கு "தூதர்" என்று பொருள். அதாவது, இறைவனுடைய செய்தியை எடுத்துச் செல்லும் தூதர்கள். திருவிவிலியத்தில் பல முக்கியமான நிகழ்வுகளில் வானதூதர்கள் தோன்றுகின்றனர். கபிரியேல் வானதூதர் மரியாவிடம் வந்து: "அஞ்சாதே, மரியே" என்று கூறி, இயேசுவின் பிறப்பைப் பற்றிய இறைவனுடைய செய்தியை அறிவித்தார். மரியா "இதோ, ஆண்டவரின் அடியேன்; உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்." இது வானதூதரின் செய்தியைக் கேட்டு இறைவனுக்கு கீழ்ப்படிந்ததை நமக்கு மிக அழகாக எடுத்துக் காட்டுகின்றது.

வானதூதர்கள் பாதுகாப்புடன் தொடர்புடையவர்கள் திபா 91:11 "உன்னைப் பாதுகாக்கும்படி உன் வழிகளிலெல்லாம் உன்னைப்பற்றி அவர் தம் தூதர்களுக்குக் கட்டளையிடுவார்." நம்மைக் காப்பவர் இறைவனே; வானதூதர்கள் இறைவனுடைய பாதுகாப்புப் பணியில் பங்கேற்கும் அவருடைய தூதர்கள். நம்மோடிருந்து பாதுகாக்கும் துணையாளர்கள். ஒவ்வொரு மனிதருக்கும் இறைவன் ஒரு காவல் தூதரை அளித்துள்ளார் என்ற நம்பிக்கை.

குழந்தைகளிடம் நாம் சொல்லுவது: "உன் காவல் தூதர் உன்னோடு இருக்கிறார்." என்பது வெறும் பயத்தை ஏற்படுத்துவதற்காக அல்ல. அதன் ஆழமான செய்தி என்னவென்றால், "நீ ஒருபோதும் தனியாக இல்லை; இறைவனின் அன்பும் பாதுகாப்பும் உன்னோடு இருக்கிறது." என்பதாகும்.

வாழ்க்கையில் நாம் வானதூதர்களைப் போல இருக்க முடியுமா? நாமும் நல்ல செய்தியை எடுத்துச் செல்ல முடியாதா?

- துயரத்தில் இருப்பவருக்கு ஆறுதல் கூறலாம்.
- நம்பிக்கை இழந்தவருக்கு நம்பிக்கை கொடுக்கலாம்.
- தவறு செய்தவரை மன்னிக்கலாம்.
- தனிமையில் இருப்பவரை அணுகலாம்.
- ஏழைகளுக்கு உதவலாம்.
- குடும்பத்தில் சமாதானத்தை உருவாக்கலாம்.
- குழந்தைகளுக்கு நல்ல முன்மாதிரியாக இருக்கலாம்.

அப்போது நாமும் இறைவனுடைய அன்பின் தூதர்களாக மாறுகிறோம்.

வானதூதர்களின் செய்தி - பயப்படாதே! இன்றைய மனிதனின் வாழ்க்கையில் பயம் அதிகம்:

- எதிர்காலத்தைப் பற்றிய பயம்
- குடும்பத்தைப் பற்றிய பயம்
- பொருளாதாரப் பிரச்சினைகள்
- நோய் பற்றிய அச்சம்
- பிள்ளைகளின் எதிர்காலம்
- வேலை மற்றும் உறவுகள் பற்றிய கவலை

இத்தகைய சூழலில் வானதூதர்களின் செய்தியை நாம் நினைவு கூறலாம்: "அஞ்சாதே; இறைவன் உன்னோடு இருக்கிறார்."

வானதூதர்கள் நம்மை இறைவனை நோக்கித் மனந்திருப்புகிறார்கள். உண்மையான வானதூதர் வழிபாட்டை தன்னிடம் திருப்புவதில்லை; இறைவனை நோக்கித் திருப்புகிறார். இதுதான் நமக்கான மிகப்பெரிய பாடம். நாம் ஒருவருக்கு உதவும்போது: "நான் செய்தேன்" என்று பெருமைப்படாமல், "இறைவன் என்மூலம் இதைச் செய்ய வைத்தார்" என்று சொல்லக் கற்றுக்கொள்ள வேண்டும். அதுவே வானதூதர்களின் பண்பாகும்.

இன்றைய வாழ்க்கையில், ஒரு குடும்பத்தில் ஒருவர் கோபமாக இருக்கிறார். இன்னொருவர் அவரிடம் சென்று அன்பாகப் பேசுகிறார். அந்த நேரத்தில் அவர் ஒரு சமாதானத்தின் தூதர். ஒரு குழந்தை தோல்வியடைந்து அழுகிறது. ஆசிரியர் அவனைத் தூக்கி நிறுத்தி, "மீண்டும் முயற்சி செய்; உன்னால் முடியும்" என்று சொல்கிறார். அந்த ஆசிரியர் நம்பிக்கையின் தூதர். ஒரு முதியவர் தனியாக இருக்கிறார். ஒருவர் அவரைச் சந்தித்து சில நிமிடங்கள் அன்புடன் பேசுகிறார். அவர் அன்பின் தூதர். ஒருவர் தவறு செய்திருக்கிறார். அவரை அழித்துவிடாமல், மன்னித்து திரும்பி வருவதற்கான வாய்ப்பை நாம் கொடுக்கிறோம். அப்போது நாம் இரக்கத்தின் தூதர்களாக மாறுகிறோம். நாம் தினமும் காலையில் எழும்போது, "ஆண்டவரே, இன்று என்னை உமது அன்பின் தூதராகப் பயன்படுத்தும்" என்று ஜெபிப்போம்.

**வானதூதர்கள் நமக்கு மூன்று முக்கியமான பாடங்களைக் கற்றுத் தருகிறார்கள்:**

1. இறைவனைப் போற்றுவோம்.
2. இறைவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவோம்.
3. பிறருடைய வாழ்க்கையில் இறைவனின் அன்பையும் நம்பிக்கையையும் கொண்டு செல்வோம்.





# அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார்

## வாழ்வை அறிவோம்

*திரு. விக்டர்*

### ஆயரும் மறைச்சாட்சியும்

புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார் தொடக்கக்கால கிறிஸ்தவத் திருஅவையின் மிக முக்கியமான ஆயர்களில் ஒருவராவார். இவர் கி.பி. முதல் நூற்றாண்டின் இறுதியிலும் இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர். திருஅவையின் ஒன்றிப்பு, ஆயரின் வழிநடத்துதல், நற்கருணை மற்றும் கிறிஸ்துவின் மீதான ஆழமான நம்பிக்கை ஆகியவற்றைத் தமது வாழ்வாலும் எழுத்துக்களாலும் எடுத்துக்காட்டியவர்.

### பிறப்பு மற்றும் அழைப்பு

இஞ்ஞாசியார் சிரியாவின் அந்தியோக்கு நகரில் வாழ்ந்த கிறிஸ்தவராக அறியப்படுகிறார். கிறிஸ்தவ நம்பிக்கையைத் தழுவிய பின்னர், திருத்தூதர்களின் போதனையில் ஆழமாக வளர்ந்தார். மரபுப்படி, திருத்தூதர் யோவானின் சீடர்களுள் ஒருவராகவும், திருத்தூதர்களின் காலத்திற்குப்

பிந்தைய திருஅவைத் தலைவராகவும் அவர் கருதப்படுகிறார். பின்னர் அவர் அந்தியோக்கு ஆயராக பொறுப்பேற்றார். அக்காலத்தில் அந்தியோக்கு கிறிஸ்தவத்தின் முக்கிய மையங்களில் ஒன்றாக இருந்தது. இஞ்ஞாசியார் தமது சமூகத்தை விசுவாசத்திலும் அன்பிலும் ஒன்றுபடுத்தி வழிநடத்தினார்.

## கிறிஸ்துவின்மீது ஆழமான அன்பு

இஞ்ஞாசியாரின் வாழ்வின் மையம் இயேசு கிறிஸ்துவே. கிறிஸ்துவுக்காகத் துன்பங்களை ஏற்றுக்கொள்வதிலும், அவரது பெயருக்காக உயிரை அர்ப்பணிப்பதிலும் அவர் அஞ்சவில்லை. அவர் கிறிஸ்தவ ஒன்றிப்பை மிகவும் வலியுறுத்தினார். ஆயர், குருக்கள், திருத்தொண்டர்கள் மற்றும் இறைமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து திருஅவையின் வாழ்வில் பங்கேற்க வேண்டும் என்று போதித்தார். குறிப்பாக நற்கருணை கிறிஸ்தவர்களின் ஒன்றிப்பின் அடையாளமாக இருப்பதை அவரது எழுத்துக்கள் வலியுறுத்துகின்றன.

## கைது மற்றும் உரோம் பயணம்

உரோமப் பேரரசர் டிராஜன் (Drajan) காலத்தில், கிறிஸ்தவ நம்பிக்கைக்காக இஞ்ஞாசியார் கைது செய்யப்பட்டார். அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவரை சிரியாவின் அந்தியோக்கிலிருந்து உரோமுக்கு அழைத்துச் சென்றனர். நீண்டதும் கடினமானதுமான இந்தப் பயணத்தின்போது, பல கிறிஸ்தவ சமூகங்களைச் சந்திக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அந்தப் பயணத்தின்போது அவர் பல திருஅவைகளுக்கு கடிதங்களை எழுதினார். இக்கடிதங்கள் தொடக்ககால கிறிஸ்தவத்தின் நம்பிக்கை, திருஅவை அமைப்பு, நற்கருணை, ஒன்றிப்பு மற்றும் மறைச்சாட்சியம் பற்றிய முக்கியமான சான்றுகளாக உள்ளன. இவர் உரோமைக்குச் செல்லும் வழியில் பல முக்கியமான கடிதங்களை எழுதினார். இந்தக் கடிதங்களில், கிறிஸ்தவர்கள் அன்பிலும் விசுவாசத்திலும் ஒன்றுபட்டு, ஆயரின் வழிநடத்துதலோடு திருஅவையின் வாழ்வில் நிலைத்திருக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

## மறைச்சாட்சிக்கான ஏக்கம்

உரோமைத் திருஅவைக்கு எழுதிய கடிதத்தில், கிறிஸ்துவுக்காகத் தமது உயிரை அர்ப்பணிக்கத் தயாராக இருப்பதை மிகவும் ஆழமாக வெளிப்படுத்தினார். அவர் மரணத்தை வெறுமனே தண்டனையாகப் பார்க்கவில்லை. மாறாக, கிறிஸ்துவோடு முழுமையாக ஒன்றிணைவதற்கான இறுதி அர்ப்பணிப்பாகக் கண்டார். அவரது புகழ்பெற்ற ஆன்மிக உணர்வு: "நான் கிறிஸ்தவராக அழைக்கப்படுவது மட்டும் போதாது; கிறிஸ்தவனாக உண்மையில் வாழ வேண்டும்" என்பதாக அவரது வாழ்வு நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

## உரோமில் மறைச்சாட்சி

இஞ்ஞாசியார் உரோமுக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர், கிறிஸ்துவின்மீது கொண்ட விசுவாசத்தை மறுக்காமல் மறைச்சாட்சியாக உயிர்த் துறந்தார். மரபுப்படி, அவர் காட்டு விலங்குகளுக்கு இரையாகக் கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டார். அவரது உடல் உறுப்புகளின் சில பகுதிகள் பின்னர் அந்தியோக்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டதாக திருஅவை மரபு கூறுகிறது. "நமது விசுவாசம் வெறும் பெயரளவில் இருக்கிறதா, அல்லது நமது வாழ்க்கையின் ஒவ்வொரு செயலிலும் கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறதா?" புனித இஞ்ஞாசியாரின் பரிந்துரையால், நாமும் கிறிஸ்துவில் ஆழமான விசுவாசத்துடனும், திருஅவையில் ஒன்றிப்புடனும், அன்புடனும், தியாக மனப்பான்மையுடனும் வாழ இறைவன் அருள் புரிவாராக.





# அருளாளர் தொன் மைக்கேல் ரூவா

## வாழ்வு தரும் பாடம்

*திரு. ஜான் அலெக்ஸ்*

பிரான்சிஸ்கு சலேசியார் துறவற சபையை நிறுவிய தொன் போஸ்கோ மறைந்து சில நாட்களே ஆகிய சமயம். அந்த சபையின் எதிர்காலம் ஒரு புதிராகவும், நிலையற்ற தன்மைக் கொண்டதாகவும் மாறி வருகிற நேரம். ஏனென்றால் தொன் போஸ்கோவினால் மட்டுமே உயிர்பெற்று வாழ்ந்து வந்தது அச்சபை எனலாம். ஆகவேதான் அவர் மறைவுக்குப்பின் எதிர்காலத்தை இழந்து வாடிக்கொண்டிருந்தது அந்த சபை. யார் இச்சபையைத் தலைமையேற்று வழிநடத்துவது? பல துன்பங்களையும் சவால்களையும் ஏற்க தைரியம் கொண்ட ஒருவரே இதற்கு சரியானவர். அதிலும் பிட்மான்ட் மறைமாவட்டத்தில் துறவற சபைகள் மடிந்து வருகிற காலம் அது. தொன் போஸ்கோவால் தெம்பூட்டப்பட்டு அவர் குடும்பத்தில் வாழுகின்ற பொதுநிலை சலேசியர்களின் உதவியாலும் குழுவாக துறவற இல்லங்களில் வாழும் திருநிலை சலேசியர்களினாலும் பிட்மான்ட் திருஅவையில் ஒரு நம்பிக்கையை சலேசிய சபை ஏற்படுத்தி தந்திருந்தது. சலேசிய சபை தனது பணிகளில் சிறந்து விளங்கினாலும் அதற்கு இருக்கும் கடன்களுக்கு யார்

பொறுப்பேற்பது? ஆம் 6 லட்சம் லீரேக்கள் கடன்பட்டிருக்கிறது. இருப்பினும் ஒரு நம்பிக்கை, திருத்தூதர் பணி 5:39ல் உள்ளதுபோல, "அவை கடவுளைச் சார்ந்தவை என்றால், நீங்கள் அவற்றை ஒழிக்க முடியாது".

மற்றொரு புறம் தொன் போஸ்கோவிற்குப் பிறகு சபையை வழிகாட்டக்கூடிய முதல் தலைவரை, வாரிசைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்வு தொடங்கியது. ஒட்டுமொத்த சலேசியர்களின் ஒரே முடிவாக ஒரே குரலாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் தொன் மைக்கேல் ரூவா. இதனை 1884 நவம்பர் 27ம் நாள் கத்தோலிக்க தலைமைப்பீடம் உறுதி செய்தது. தொன் போஸ்கோவின் வாரிசாக அவரது இடத்தில் இருந்து சலேசிய சபையை வழிநடத்தும் தகுதியற்றவராகவே தன்னை எப்போதும் நினைத்தார் தொன் ரூவா. குறிப்பாக அவரது மனப்பூர்வ ஒப்புதல் அடங்கிய கோப்பு சலேசிய ஆவணக்காப்பகத்தில் இல்லை என்பது விந்தையான ஒரு செய்தி. இதற்கிடையில் இச்சபையுடன் ஒத்த கோட்பாடுகளும் பணிகளும் உடைய வேறொரு சபையுடன் இணைப்பது பற்றி திருஅவையின் நிபுணர்கள் முயற்சித்தார்கள். சலேசியர்களின் நண்பரும் ஆயருமான எமிலன் மனகார்டியா தலையிட்டு தொன் ரூவாவின் தலைமையில் சலேசிய சபையானது தொடர வழிசெய்து சலேசிய சபையின் எதிர்காலத்தை உயர்த்தினார். அதனைத் தொடர்ந்து 1888 பிப்ரவரியில் தொன் ரூவாவை சலேசிய சபையின் தலைவராக நியமித்து திருத்தந்தை தனது அங்கீகார ஆணையின் மூலம் உறுதி செய்தார்.

இதெல்லாம் சரி, யார் இந்த மைக்கேல் ரூவா? என்று கேட்கிறீர்கள் அல்லவா? இதோ தொடர்கிறது. ஜூன் 9, 1837ல் ஒன்பது பிள்ளைகளில் கடைசியாக பிறந்தவர் மைக்கேல் ரூவா. தன் சகோதரர் லூயிஸ், தொன் போஸ்கோவின் ஆரட்டரிக்குச் சென்று வருவது வழக்கம். இப்படித்தான் ரூவாவுக்கும் ஆரட்டரி பற்றி தெரியவந்தது. தனது 15வது வயதில் 1852ல் தொன் போஸ்கோவின் ஆரட்டரியில் வந்து சேர்ந்தார். இன்னொரு முக்கியமான நிகழ்வு ரூவாவிற்கு ஏற்பட்டது. தொன் போஸ்கோ தன் ஆரட்டரிக்கு வரும் பிள்ளைகளுக்கு மெடல்கள் கொடுப்பார். ரூவா ஒருமுறை தொன் போஸ்கோவிடம் மெடல் பெறுவதற்காகத் தன் கையை நீட்ட, தொன் போஸ்கோ மெடலுக்குப் பதிலாக தன் கையை பாதியாகத் தருகிறேன் என்றாராம். இதன் மூலம் சலேசிய சபைக்கும் ரூவாவிற்கும் இருக்கப் போகும் உறவைப் பற்றி தொன் போஸ்கோ அப்போதே முன்தெரிந்து வைத்திருந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சலேசிய சபையை ஆரம்பிக்கும் எண்ணத்தை தொன் போஸ்கோ பகிர்ந்துகொண்டவர்களில் ரூவாவும் ஒருவர். அதுமுதல் தொன் போஸ்கோவுடன் சேர்ந்து சலேசிய சபையின் வளர்ச்சியில் 36 ஆண்டுகள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் ரூவா. தனது முதல் வார்த்தைப்பாட்டை 1855ல் எடுத்த நாள் முதல் ஏறக்குறைய 22 ஆண்டுகள் சபையின் முதல் ஆன்மீக இயக்குனராக பணியாற்றினார். சலேசிய குருவாக 1860ல் திருநிலைப்படுத்தப்பட்டார். மிரபெல்லோவில் உள்ள கல்லூரியின் முதல் இல்லத்தந்தையாகப் பொறுப்பேற்று 26 ஆண்டுகள் பணியாற்றினார். பிறகு

கத்தோலிக்க நாளிதழின் மேலாளராகவும், வல்தோக்கோவின் துணை இல்லத்தந்தையாகவும் பணியாற்றினார். உருவாக்கத்தில் பெரிதும் துணையாகத் திகழ்ந்தார், சலேசிய அருட்கன்னியர்களின் சபைக்கான இயக்குனராகவும் எல்லாவற்றிற்கும் மேலாக தொன் போஸ்கோவின் பயணங்களில் அவரோடு உடனிருந்து பயணித்த பாக்கியம் பெற்றவராகவும் தொன் ரூவா திகழ்ந்தார். தனக்குப் பிறகு சலேசிய சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்று சபைத்தலைவராக தொன் ரூவாவை நியமிக்க வேண்டும் என்ற தொன் போஸ்கோவின் இறுதி வேண்டுகோளை ஏற்று திருத்தந்தை 13ம் லியோ, தொன் போஸ்கோவின் மறைவுக்குப்பின் 1888ல் தொன் ரூவாவை சலேசிய சபைத் தலைவராக நியமித்து உறுதி செய்தார்.

ஒழுங்குமுறைகளையும் சட்டத்திட்டங்களையும் போற்றி நேர்மையாகக் கடைப்பிடிப்பதால் "வாழும் விதிமுறை" என்று தொன் ரூவாவை சலேசியரும் மற்றவரும் அன்போடு அழைப்பதுண்டு. 1909ல் தொன் ரூவாவின் குருத்துவ பொன்விழாவினைச் சிறப்பித்தனர். தன்னுடைய பணிகளை அருளாளர் பிலிப் ரினால்டி அவர்களிடம் ஒப்படைத்து கொண்டார். உலகில் மொத்தம் 773 ஆக இருந்த சலேசியர்களின் எண்ணிக்கை 4000 ஆகவும், 64 ஆக இருந்த சலேசிய இல்லங்களை 345 ஆகவும், 6 ஆக இருந்த சலேசிய மாநிலங்களை 34 மாநிலங்களாகவும் விரிவுப்படுத்தி 33 நாடுகளில் சலேசியப் பணியை வளர்த்த பெருமை தொன் ரூவாவிற்கு உண்டு. தொன் போஸ்கோவின் கட்டளைக்கேற்ப தொன் ரூவா மிரபெல்லோவின் இல்லத் தந்தையாக அனுப்பப்பட்டபோது, அங்கு இருந்தவர்களின் பேச்சு என்ன தெரியுமா? வல்தோக்கோவில் தொன் போஸ்கோவைப் போல மிரபெல்லோவில் தொன் ரூவா நடந்து கொள்கிறார் என்பதுதான். அதுமட்டுமல்ல தொன் போஸ்கோவின் இறப்புக்குப் பின்னும் அவரது அரவணைப்பை உடனிருப்பை உணர்ந்தவராக வாழ்ந்தார் தொன் ரூவா. அதனால்தான் சபைக்கு இருந்த 6,00,000 லீரே கடனை திரும்பக் கேட்டபோது கர்தினால் அல்மோன்டாவிடம் தொன் ரூவா மறுமொழியாக சொன்னது, "மேதகு கர்தினால் அவர்களே தொன் போஸ்கோ விண்ணகத்திலும் எங்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார்" என்பதே. உண்மையில் பாருங்கள் தொன் ரூவா மரித்தபோது சபைக்கு எந்த கடனும் இல்லை.

தன்னுடைய வாழ்நாள் முழுவதும் செய்த பணிகள் அனைத்தும் தொன் போஸ்கோவின் கனவுகளும் இலட்சியங்களும் தவிர வேறில்லை. தொன் போஸ்கோவின் எண்ணங்கள் சிந்தனைகள் பல இருந்தாலும் 1886 ஏப்ரல் 9ம் நாள் அவர் கண்ட தீர்க்கதரிச கனவு அதாவது எதிர்கால மறைபோதக பணியான சிலி நாட்டிலிருந்து சீனாவிற்கு மறைப்பணியாளர்களை அனுப்பியது. அதன் அடிப்படையில் நமது நாட்டிற்கும் முதன் முதலில் சலேசியர்கள் அனுப்பிவைத்தவர் தொன் ரூவா என்பதை நினைக்கும்போது நாம் பெருமைக் கொள்ளவேண்டும். இவ்வாறாக தொன் போஸ்கோவின் எண்ணங்கள் அனைத்தையும் தொன் ரூவா நிறைவேற்றினார் என்பது வரலாறு கூறும் உண்மை. "தொன் போஸ்கோவின் தகுதியுள்ள பிள்ளைகளாக வாழ்வதே" என்ற அன்பு கட்டளையை செய்தியாக விட்டுச்சென்றவர் தொன் ரூவா.



அதுவே அவரது அன்றாட செபமாகவும் இருந்தது. அவர் மரணப்படுக்கையில் இருக்கும் போதுகூட தனது சலேசியர்களுக்கு தொன் போஸ்கோ சொன்ன அதே வார்த்தைகளைதான் சொன்னார். "விண்ணகத்தில் நாம் அனைவரும் ஒன்றாக சந்திப்போம்" என்பதே அந்த நம்பிக்கையூட்டும் வார்த்தைகள். தொன் ரூவா, தனது 73 வயதில் ஏப்ரல் 6, 1910ல் மறைந்தார். அக்டோபர் 29, 1972ல் திருந்தந்தை 6ம் பவுல் இவரை அருளாளராக உயர்த்தினார். அப்போது திருத்தந்தை, "தொன் போஸ்கோவில் உருவாகிய சலேசிய சபை, தொன் ரூவாவில் தொடர்ந்து வளர்கிறது. தொன் போஸ்கோவை தன் பள்ளியாகவும், அவரது ஒழுங்குமுறைகளை தன் உள்ளுணர்வாகவும், அவரது புனிதத்துவத்தை தனது முன்மாதிரியாகவும் கொண்டு வாழ்ந்தவர் தொன் ரூவா" என்று குறிப்பிட்டது சலேசியர்களுக்கும், சலேசிய குடும்பத்திற்கும் மட்டுமல்ல எல்லா இறைமக்களுக்கும் தொன் ரூவாவின் வாழ்வு நிச்சயம் புனிதத்துவத்திற்கான ஒரு பாதையாக இருந்தது என்பது உண்மை.



# திருஅவைச் செய்திகள்

*அருட்சகோ. யோவான் ச.ச*

## "அமைதி நமக்குள் வளரட்டும் உலகில் மலரட்டும்": திருத்தந்தை

ஜெனாசானோவில் உள்ள நல்ல ஆலோசனையின் அன்னை மரியா திருத்தலத்தில் திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், மரியாவின் அமைதியான உடனிருப்பைத் தியானித்து, கிறிஸ்தவர்கள் அமைதியின் பணியாளர்களாக மாற வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். எளிமை, தாழ்மை மற்றும் பிறருக்குச் சேவை செய்வதே உண்மையான வலிமையின் அடையாளங்கள் என்று அவர் வலியுறுத்தினார். "அமைதி" இறைவன் அளிக்கும் கொடையும், உயிர்த்தெழுந்த ஆண்டவரின் உயிர்மூச்சும், தூய ஆவியாரின் செயல்பாடும் எனக் குறிப்பிட்ட அவர், "அமைதி நம் உள்ளத்தில் வேரூன்றி வளரட்டும் பின்னர் அது உலகில் மலரட்டும்" என்று அழைப்பு விடுத்தார்.

## "முன்னேற்றம் புதிய அழிவுகளுக்கு வழிவகுக்கக் கூடாது": திருத்தந்தை

அமெரிக்கக் கண்டத்தின் சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்க்கொள்ள திருஅவை, அரசுகள், நிறுவனங்கள்,

தொழிலாளர்கள் மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து செயல்பட வேண்டும் என்று திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் அழைப்பு விடுத்தார். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் மனித மாண்பையும் பொதுநலனையும் பாதுகாக்கும் வகையில் அமைய வேண்டும் என்று வலியுறுத்திய அவர், வேறுபாடுகளைக் கடந்து பேச்சுவார்த்தை மற்றும் ஒத்துழைப்பு கலாச்சாரத்தை வளர்க்குமாறு கேட்டுக்கொண்டார். முன்னேற்றம் புதிய அழிவுகளை உருவாக்காமல், குறிப்பாகத் தேவையில் இருப்போருக்கு பாதுகாப்பான இல்லமாகவும் அடைக்கலமாகவும் அமைய வேண்டும் என்றும் திருத்தந்தை வலியுறுத்தினார்.

## யூதர்களின் இலையுதிர்கால திருவிழாக்களுக்கு திருத்தந்தை வாழ்த்து

யூதர்களின் ரோஷ் ஹஷானா, யோம் கிப்பூர் மற்றும் சுக்கோத் திருவிழாக்களை முன்னிட்டு, உரோம் நகரின் தலைமை யூத மதகுரு ரிக்கார்டோ டி செஞ்ஞி அவர்களுக்கும் யூத சமூகத்தினருக்கும் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் வாழ்த்து தெரிவித்தார். இத்திருவிழாக்கள் இறைவனின் ஆசீர்வாதம், மகிழ்ச்சி, அமைதி, நன்றியுணர்வு மற்றும் சகோதரத்துவத்தின் தருணங்களாக அமைய வேண்டும் என்று அவர் வாழ்த்தினார். மேலும், யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு இடையிலான நட்புறவு உரோமிலும் உலகெங்கிலும் தொடர்ந்து வளர இறைவேண்டல் செய்வதாகத் தெரிவித்தார்.

## 71-வது பிறந்தநாளைக் கொண்டாடும் திருத்தந்தை

திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் தனது 71-வது பிறந்த நாளைக் கொண்டாடினார். அமைதி, ஒன்றிப்பு, உரையாடல் மற்றும் மனித மாண்பைப் பாதுகாத்தல் ஆகியவை அவரது முதல் திருத்தந்தைப் பணியாண்டின் முக்கிய கருப்பொருள்களாக அமைந்தன. துருக்கி, லெபனான் உள்ளிட்ட நாடுகளுக்கான திருத்தூதுப் பயணங்கள், 2025 புனித ஆண்டு நிறைவு மற்றும் செயற்கை நுண்ணறிவு குறித்த Magnifica Humanitas சுற்றுமடல் ஆகியவை அவரது பணியின் முக்கிய நிகழ்வுகளாக அமைந்தன. ஏழைகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் மீதான அக்கறையையும் அவர் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறார். அமைதி, ஒன்றிப்பு மற்றும் மனித மாண்பைப் பாதுகாப்பதைத் தொடர்ந்து முன்னிறுத்தும் பணியை அவர் மேற்கொண்டு வருகிறார்.

## திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் “அருளின் கீழ் விடுதலை” நூல் ஆங்கிலத்தில் வெளியீடு

திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் எழுதிய Freedom Under Grace: Reflections on the Spiritual Tradition That Formed Me என்ற நூலின் ஆங்கிலப் பதிப்பு அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஆஸ்திரேலியா மற்றும் காமன்வெல்த் நாடுகளில் வெளியிடப்பட்டது. புனித அகுஸ்தினாரின் ஆன்மிக மரபு தமது வாழ்விலும் சிந்தனையிலும் ஏற்படுத்திய தாக்கத்தை இந்நூல் எடுத்துரைக்கிறது. மறையுரைகள், உரைகள் மற்றும் தனிப்பட்ட எழுத்துகளின்

தொகுப்பாக அமைந்துள்ள இந்நூல், வறுமை, மனித உரிமைகள், சமூக ஒருமைப்பாடு மற்றும் விளிம்புநிலை மக்களுக்கான சேவை குறித்த அவரது சிந்தனைகளையும் பதிவு செய்கிறது. இந்நூலின் மூல இத்தாலியப் பதிப்பு Liberi sotto la Grazia என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

## "அன்பு விடுதலை செய்யவும், ஒன்றிணைக்கவும், கட்டியெழுப்பவும் செய்கிறது": திருத்தந்தை

தமது பெயரில் புளோரன்சில் நிறுவப்பட்ட அனைத்துலக ஆய்வு மையம், சிந்தனை, விமர்சனப் பார்வை மற்றும் உரையாடலை வளர்க்கும் தளமாகச் செயல்பட வேண்டும் என்று திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் கேட்டுக்கொண்டார். பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள், அரசு அமைப்புகள், குடிமைச் சமூகங்கள் மற்றும் திருஅவை அமைப்புகளுடன் இணைந்து பொதுநலன், நீதி மற்றும் அமைதியை வளர்க்க வேண்டும் என வலியுறுத்தினார். போர்களால் அல்ல, அமைதி, நீதி மற்றும் அனைவரின் பங்கேற்பால் நாகரிகம் கட்டியெழுப்பப்படுகிறது என்று கூறிய அவர், "அன்பு விடுதலை செய்வதற்காக இணைக்கிறது, உருவாக்குவதற்காக ஒன்றிணைக்கிறது, கட்டியெழுப்புவதற்காக நம்மை அர்ப்பணிக்கச் செய்கிறது" என எடுத்துரைத்தார். புதிய பாதைகளில் நம்பிக்கையுடன் மக்கள் இணைந்து பயணிக்க இம்மையம் உதவ வேண்டும் என்றும் திருத்தந்தை அழைப்பு விடுத்தார்.

## ஆசிய கத்தோலிக்க எண்ணிம மறைபரப்பாளர்கள் கிறிஸ்துவின் உண்மையான சான்றுகளாக விளங்க வேண்டும் : திருத்தந்தை

சமூக ஊடகத்தில் செல்வாக்கு செலுத்தும் ஆசியக் கண்டத்தின் கத்தோலிக்கர்கள் தங்கள் எண்ணிம உள்ளடக்கத்தில் இயேசு கிறிஸ்துவின் உண்மையான சான்றுகளாக வளர திருத்தந்தை லியோ அவர்கள் வலியுறுத்தினார். பிலிப்பைன்ஸ் நாட்டின் கெய்சன் நகரில் இடம்பெற்ற முதல் ஆசிய கத்தோலிக்க எண்ணிம மறைபரப்பாளர் மாநாட்டில் பங்கேற்றவர்களுக்கு வழங்கிய தனது செய்தியில் இவ்வாறு திருத்தந்தை கூறியுள்ளார். "**செல்வாக்காளர்களிலிருந்து சாட்சிகளாக:** ஆசியாவில் எண்ணிம மறைபரப்பிற்கான ஒருங்கிணைந்த பாதை" என்ற கருப்பொருளின் கீழ் இடம்பெற்ற இக்கூட்டம், பங்கேற்பாளர்கள் எண்ணிம உள்ளடக்கங்களை உருவாக்குவதோடு நின்றுவிடாமல், உடனிருப்பு, ஒத்துழைப்பு மற்றும் மறைப்பணி ஆகியவற்றின் மூலம் கிறிஸ்துவின் உண்மையான சான்றுகளாக மாற ஊக்குவித்துள்ளது. ஆயர் மார்செலினோ அந்தோனியோ ஜூனி மரலிட் அவர்கள், எண்ணிம மறைபரப்பாளர்கள் உள்ளடக்கம் என்பதிலிருந்து சந்திப்பை நோக்கியும், பார்வையாளர்கள் என்பதிலிருந்து சமூகங்கள் நோக்கியும், போட்டி என்பதிலிருந்து ஒத்துழைப்பு நோக்கியும், செல்வாக்கு என்பதிலிருந்து சான்று வாழ்வு நோக்கியும் நகர வேண்டும் என்று வலியுறுத்தினார். கர்தினால் பாப்லோ வெர்ஜிலியோ அவர்கள், "கோபம் பரப்பப்படும்போது துணிச்சலோடும், இகழ்ச்சி பரப்பப்படும்போது மாண்போடும் பதிலளியுங்கள் என்றும், கதவுகள் மூடப்படும்போது, நீங்கள் பாலமாக மாறுங்கள்" என்றும் பங்கேற்பாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.



### இரண்டாம் வத்திக்கான் சங்க ஒளியில்...

# கடவுள் அமைத்து வைக்கும் மேடை

*திரு. ச. ஜான் போஸ்கோ*

'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அக்தும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று'

திருமணம் ஓர் அருள்சாதனம், கடவுளோடுள்ள நெருங்கிய உறவைக் கொண்டாடும் அடையாளம், ஓர் பெண்ணும் ஒரு ஆணும் இறுதிவரைச் சேர்ந்து வாழ்வதற்கு செய்த ஏற்பாடே இல்லறமாகும். இரண்டாம் வத்திக்கான் சங்கம் (1962-65) வரை, இல்லறத்தார் கற்புடையவர்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை. துறவறம் பூண்டவர்களுக்கே கற்பு உண்டு என்று கருதப்பட்டது. திருமணம் ஓர் அருளடையாளமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும், 'குருத்துவம்' எனும் அருளடையாளத்தை விட 'திருமணம்' மதிப்பு குறைந்ததாகவே எண்ணப்பட்டது. திருமணம் ஓர் 'உடன்படிக்கை' என்ற விவிலியச் சொல்லை இரண்டாம் வத்திக்கான் சங்கம் பயன்படுத்துகிறது. (இன்றைய உலகில் திருச்சபை எண்.50) கிறிஸ்து மணமக்களை சந்திக்கிறார் என்பது நமது நம்பிக்கை (இ.உ.தி.எண்.48). அதாவது, கடவுளுக்கும் மானிடருக்கும் இடையே உள்ள ஆளோடு ஆள்சார்ந்த ஆழமான பிரிக்க முடியாத அன்புறவே திருமணம். இதில் ஈடுபட்டு இணையும் இருவரும் இருவரல்லர், ஒரே உடல் (மாற்கு10:8). இந்த இணையர் உருவாக்கும் குடும்பமே இல்லத் திருஅவை. (திருஅவை எண்.11).

மணமக்கள் தங்களின் கடமைகளையும் மாண்பையும் செயலாக்கம் பண்ண திருநிலையைப் பெற்றவர்கள். அவர்கள் ஒருவர் ஒருவரைத் தூய்மைப்படுத்துகின்றனர். குழந்தைகளும் தங்கள் பெற்றோர் தூய்மையடைய உதவுகின்றனர். இவ்வாறு குடும்பத் திருஅவை திருஅவையின் உண்மையான இயல்பை வெளிப்படுத்த அழைப்பு பெற்றுள்ளது. திருமண அன்பு குடும்பப் பாசத்தை வளர்க்கிறது. இதனால் உள்ளத்து உணர்வுகளும் உடல்சார்ந்த செயல்களும் குடும்பத்தில் இடம் பெறுகின்றன. ஒருவர் ஒருவருக்கு சுதந்திரமாகத் தம்மையே கொடையாகக் கையளிக்கத் திருமண அன்பு அவர்களை இட்டுச் செல்கிறது. திருமண அன்பு வெறும் காம உணர்ச்சிக்கு

மிகவும் அப்பாற்பட்டு, திருமணத்திற்கே உரிய செயலாகிய தாம்பத்திய உறவில் சிறப்பான முறையில் வெளிப்படுத்தப்படுகிறது. ஆணும் பெண்ணும் சரிசமமான மனித மாண்புடையவர்கள் என்பதை அவர்கள் மனதில் உறுதியாகக் கொள்ள வேண்டும். அப்போதுதான் திருமண அன்பின் மதிப்பு வளர்ந்தோங்கும். அதனால், கற்பு நிலையைப் பேண உரிய பயிற்சியும் நேர்மையான மனஉறுதியும் பெற்ற பின்பே திருமண வாழ்வில் புக வேண்டும். அவசரக் கோலத்தில் திருமணங்கள் நடப்பது கேட்டை விளைவிக்கும்.

'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது' (திருக்குறள்)

ஆண்-பெண் உறவே மனிதர் குடும்பத்தை உருவாக்க அடிப்படையாக அமைந்துள்ளது. மனிதர் தோன்றுவதற்கு முன்பு, ஆண், பெண் என்ற பிரிவு இருந்ததா என்பது பற்றி இயற்கையை ஆராயும் அறிவியல் ஒரு தெளிவைத் தருகிறது. உயிரற்றது என்று நாம் கருதும் பொருட்களில் கூட ஆண்-பெண் தன்மை ஒருங்கே உள்ளது; சில பாக்டீரியாக்கள் வேறொன்றின் உதவியில்லாமலேயே தனியாகப் பலுகிப் பெருகுகின்றன; மனித உடலில் உள்ள செல்களும் தாங்களாகவே வேறு செல்களை உருவாக்குகின்றன; அதனால் ஆணின் உதவியில்லாமலே இனப்பெருக்கம் இயற்கையில் நடக்கின்றது என்று அறிவியல் கூறுகிறது. அதனால் தான் இயற்கையையும் 'அன்னை' மற்றும் 'இளைய கன்னி' என்றும் கூறுகின்றனர்.

அதே சமயத்தில், தாவரங்களில் பெண்பூ, ஆண்பூ என்றும், விலங்குகளில் ஆண் என்றும் பெண் என்றும் பிரிவு உள்ளதையும், அதன் வழியாக இனப்பெருக்கம் தொடர்ந்து நிகழ்வதையும் காண்கின்றோம். இதைப் போன்று மனித இனப்பெருக்கம் என்ற மகப்பேறும் நடக்கின்றது. ஆனால் மனிதர் மட்டுமே ஆண்-பெண் உறவை மதித்து மனித இனப்பெருக்கத்தை ஆளும் ஆற்றலைப் பெற்றுள்ளனர். ஆள்வது என்பது தீர்மானிப்பதும் நிர்வாகம் செய்வதுமாகும்.

ஒவ்வொரு ஆணும் ஒவ்வொரு பெண்ணும் சமமான மனித மாண்புடையவரே. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒருவருக்கொருவர் தங்களையே வாழ்நாள் முழுவதும் கையளிக்கத் தீர்மானித்து, திருமணம் எனும் தூய அன்புப் பிணைப்பில் ஈடுபடுகின்றனர். இதனால் இணையர் ஆகின்றனர். இந்தத் தூய அன்பு அவர்களது உள்ளத்து உணர்வுகளுக்கும் உடல் சார்ந்த செயல்களுக்கும் ஒரு சிறப்பான மதிப்பைக் கொடுக்கிறது. இவை வெறும் காம உணர்ச்சிக்கு மிகவும் அப்பாற்பட்டது. தாம்பத்திய உறவில் திருமண அன்பு சிறப்பான முறையில் வெளிப்படுத்தப்பட்டு, இணையருக்கு இன்பம் அளிக்கிறது. படைக்கும் பரம்பொருளே தனது மனித குடும்பத்தை இணையரது ஒத்துழைப்புடன் பெருகச் செய்து வளப்படுத்துகிறார். அதே சமயம், குடும்பம் மற்றும் உலக சமுதாயத்தின் நலனில் கவனமும் அக்கறையும் செலுத்தும் பொறுப்புடைமையை இணையர் மறக்கக் கூடாது. இருப்பினும், திருமணம் குழந்தைப் பேற்றுக்காக மட்டுமே ஏற்படுத்தப்பட்டதா என்ற கேள்வி எழுகிறது!.

(தொடரும்)



# மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு

*திரு. தேவராஜ்*

'மனம்' இருப்பதனால் மனிதன் என்ற சொல் தோன்றியது. உடல் என்பது 'ஹார்டுவேர்' 'கூடு-வன்பொருள்'. உடலிலிருக்கும் மனம் 'சாப்ட்வேர்' 'மென்பொருள்'. மனிதர்களுக்கு வெறும் உடல் மட்டுமில்லை. உடலோடு சேர்ந்து மனம் இருக்கின்றது. ஆகவே,

- மனம் என்பது ஒரு நபரின் எண்ணங்கள், உணர்வுகள், நினைவுகள், கற்பனைகள், மற்றும் ஆளுமை போன்றவற்றுக்குரிய ஒரு தளமாக விளங்குகிறது.
- இது அறிவு, உணர்வு, நினைவு, மனத்திடம், கற்பனை, சிந்தனை போன்ற கூறுகளால் ஆனது.
- மனம் என்பது ஒரு நபரின் உள் மற்றும் வெளி சூழ்நிலைகள் பற்றிய புரிதலுக்கும், விழிப்புணர்வுக்கும் உதவுகிறது.
- மனம் என்பது மூளையின் செயல்பாடுகளுடன் நெருங்கிய தொடர்புடையது.
- மனம் என்பது ஒரு நபரின் அனுபவங்கள், சமூக தாக்கம், மற்றும் பரிணாம வளர்ச்சி ஆகியவற்றின் மூலம் வடிவமைக்கப்படுகிறது.
- மனம் என்பது ஒரு நபரின் தனித்தன்மையை வெளிப்படுத்துகிறது.
- மனம் என்பது ஒரு நபரின் செயல்களுக்கு வழிகாட்டுகிறது.
- மனம் என்பது ஒரு நபரின் வாழ்க்கையில் ஒரு முக்கிய பங்காற்றுகிறது.

மனம் என்பது சிந்தனை, உணர்ச்சி, நினைவு, கற்பனை, மற்றும் ஆளுமை போன்ற அறிவு மற்றும் உணர்வு சார்ந்த அம்சங்களின் ஒரு தொகுப்பு. இந்த மனம்தான் மனிதனுடைய மகிழ்ச்சிக்கு முக்கிய காரணம் என்று கூறுபவர்கள் பலர் உண்டு. அப்படியானால் மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா? அவ்வாறு மனம் போன போக்கிலே வாழ்ந்த மனிதர்கள் எல்லாரும் மகிழ்ச்சியாக இருக்கின்றார்களா? இல்லையே! ஏன்?

### மனதைச் சார்ந்த மகிழ்ச்சி (Mental & Emotional Happiness)

- நேர்மறை சிந்தனை: வாழ்க்கையை நேர்மறையாக பார்க்கும்போதுதான் நம்முடைய மனம் மகிழ்ச்சியுடன் இருக்கும்.
- உணர்வுகளை சரியாக சமாளித்தல்: கோபம், மன அழுத்தம் போன்றவற்றை சமாளிக்க கற்றுக்கொள்வது, மனநலத்தை மேம்படுத்தும்.

- சமூக உறவுகள்: குடும்பம், நண்பர்கள், மற்றும் சமூக உறவுகள் மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன.
- நன்றி செலுத்தும் பழக்கம் (Gratitude): நம் வாழ்க்கையின் சிறப்பு தருணங்களை நினைத்து நன்றி கூறுவது, மன மகிழ்ச்சியை அதிகரிக்கிறது. மகிழ்ச்சி என்பது வெறும் சிரிப்பு அல்லது தற்காலிக இன்பம் மட்டுமல்ல. இது ஒரு ஆழமான அனுபவம்.

மகிழ்ச்சியை இரண்டு விதமாகப் புரிந்து கொள்ளலாம் என்று அறிவியல் மற்றும் தத்துவவியல் கூறுகின்றன: 1. ஹீடோனிக் (Hedonic) மகிழ்ச்சி. 2. யூடைமோனிக் (Eudaimonic) மகிழ்ச்சி. ஹீடோனிக் மகிழ்ச்சி என்பது உடனடியாக அனுபவிக்கும் இன்பம் மற்றும் வேடிக்கை சார்ந்த மகிழ்ச்சியாகும். உதாரணமாக, சுவையான உணவு சாப்பிடுதல், நண்பர்களுடன் பொழுதுபோக்கு, விருப்பமான இசை, பாடல்கள் கேட்பது போன்றவை. இது சுய இன்பத்தை நோக்கி செல்லும் மகிழ்ச்சி. இது பொதுவாக தற்காலிகமானது; ஆனால் மனித மனதை உடனடி சந்தோஷத்துடன் நிரப்பும் தன்மைக் கொண்டது.

மற்றொன்று யூடைமோனிக் மகிழ்ச்சி, இது ஆழமான, நீடித்த மகிழ்ச்சியாகும். வாழ்க்கையின் அர்த்தம், நோக்கம், மற்றும் தனிப்பட்ட வளர்ச்சி ஆகியவற்றை அடைவதிலிருந்து பெறப்படும் மகிழ்ச்சியாகும். இதற்கான உதாரணங்கள்: சமூகத்திற்குச் சேவை செய்தல், புதிய அறிவை கற்றல், நல்ல உறவுகளை பேணுதல் போன்ற செயல்கள். இது மனதிற்கும் வாழ்க்கைக்கும் ஆழமான நிறைவைத் தரும்.

மனித வாழ்க்கையில் இந்த இரண்டு வகையான மகிழ்ச்சிகளும் முக்கியமானவை. ஹீடோனிக் மகிழ்ச்சி ஒவ்வொரு நாளும் சிறுசிறு மகிழ்ச்சிகளை வழங்குகின்றபோதும், யூடைமோனிக் மகிழ்ச்சி வாழ்க்கைக்கு முழுமையையும் ஆழ்ந்த நிறைவையும் அளிக்கிறது. இரண்டும் சமநிலையில் இருந்தால், அது முழுமையான மகிழ்வான வாழ்க்கையை வழங்கும்.

அழகு சாதனப் பொருட்களை மக்கள் தாராளமாக வாங்கிப் பயன்படுத்துகின்றனர். உடலை அழகு படுத்துவதற்கான 'அழகு நிலை'யங்கள் கிராமங்களிலும், பட்டணங்களிலும் மலிந்துவிட்டன. இவ்வாறு அழகு சாதனங்களைப் பயன்படுத்தி தங்களை ஒப்பனை செய்து கொள்கின்றவர்கள் எல்லாரும் வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்கின்றார்களா?

இல்லற வாழ்க்கையை மகிழ்ச்சியோடு மணமக்கள் ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக திருமண மேடை அலங்காரம், ஆடை அலங்காரம், உடல் ஒப்பனை ஆகியவற்றிற்காக சில இலட்சங்கள் செலவு செய்யப்படுகின்றன. திருமணம் முடிந்து சில நாட்களில் பல புதுமணத் தம்பதிகள் விவாகரத்து கேட்டு நீதிமன்ற வாசலில் நிற்கின்ற அவல நிகழ்ச்சிகளும் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன. குடும்பங்களில் மகிழ்ச்சி இருக்கின்றதா? மனிதர்கள் மகிழ்ச்சியாக இந்த உலகில் வாழ்கின்றார்களா? ஏன் மகிழ்ச்சியாக இல்லை?

*(தொடரும்)*

# சுடர் வாசகர் போட்டி 138

## சரியான விடைகள்

1. புனித அன்னை தெரேசா
2. நமக்கு கற்றுத் தருகின்றது. இறைவனின் தலையாய கட்டளை நான் உங்களிடம் அன்பு கூர்ந்ததுபோல நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்புக்கூறுங்கள் என்பதே
3. அன்பில்லாத ஒருவரால் இறைவனை அறிய முடியாது
4. உலக மீட்பரை ஈன்றெடுப்பதற்கென்றே கடவுளால் அன்னை மரியாள் படைக்கப்பட்டாள்.
5. ஏழு எழுபதுமுறை மன்னிக்க வேண்டும்
6. திருச்சிலுவை
7. ஏழு
8. இறைவாக்கினர் எசாயா
9. இறைவனின் கொடை
10. அருளாளர் ஜோசப் கலசான்ஸ்
11. புனிதர்கள் கோஸ்மாஸ் மற்றும் தமியான்
12. இரு மகன்கள்
13. "வானம் திறந்திருப்பதையும் கடவுளின் தூதர்கள் மானிடமகன்மீது இறங்குவதையும் காண்பீர்கள்"
14. புனித ஜெரோம்
15. அருளாளர் ஜோசப் கலசான்ஸ்



### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mrs. Santhosa Mary, Coimbatore
Mr. Lourdusamy, Bangalore
Ms. Edwin Mary, Villupuram

# சுடர்

## வாசகர் போட்டி 139



1. அருளாளர் தொன் மைக்கேல் ரூவா அவர்களுக்கு அருளாளர் பட்டம் வழங்கிய திருத்தந்தை பெயர் என்ன?
2. "கடவுளுக்குரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்" இந்த இறைவார்த்தை எந்த நற்செய்தியில் இடம் பெற்றுள்ளது? அதன் அதிகாரம், திருவசனம் குறிப்பிடுக?
3. புனித அந்தோணி மரிய கிளாரெட் ஏற்படுத்திய சபையின் பெயர் என்ன?
4. புனித இஞ்ஞாசியார் என்ற பெயரின் பொருள் என்ன?
5. "அமைதி நம் உள்ளத்தில் வேரூன்றி வளரட்டும் பின்னர் அது உலகில் மலரட்டும்" என்று அழைப்பு விடுத்தவர் யார்?
6. யாரை ஆண்டவர் திராட்சைத் தோட்டம் என்றும், ஆர்வத்துடன் நட்ட கன்று என்றும் குறிப்பிடுகிறார்?
7. கடவுளிடம் நம் விண்ணப்பங்களை எவ்வாறு தெரிவிக்க வேண்டும்?
8. உறவுக்கு அடிப்படையாக இருப்பது எது?
9. இறை அன்பு என்றால் என்ன?
10. வானதூதர்களின் முதன்மையான பணி என்ன? எதற்காகப் படைக்கப்பட்டார்கள்?
11. புனித தெரேசா எதன் வழியாக கிறிஸ்துவோடு ஆழமாக ஒன்றிணைய விரும்பினார்?
12. அறிவியல் மற்றும் தத்துவவியலாளர்கள் மகிழ்ச்சியை எத்தனை விதமாகப் புரிந்து கொள்ளலாம் என்று கூறுகின்றனர்? அவை யாவை?
13. தொன் ரூவாவின் தலைமையில் சலேசிய சபையானது தொடர வழிசெய்து சலேசிய சபையின் எதிர்காலத்தை உயர்த்தியது யார்?
14. கிறிஸ்துவுக்காகத் துன்பங்களை ஏற்றுக்கொள்வதிலும், அவரது பெயருக்காக உயிரை அர்ப்பணிப்பதிலும் சிறந்து விளங்கியவர் யார்?
15. இறைவனின் இரக்கமுள்ள அன்பில் முழுமையாக நம்பிக்கை வைத்தவர் யார்?

### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

இறைவார்த்தையை தீபகச் சுடர் மின்னிதழ் வழியாக அனைவருக்கும் எடுத்துரைக்கும் பணியில் எங்களோடு இணைந்து பயணிப்பதற்கு நன்றி. இந்த மின்னிதழை நீங்கள் வாட்சப் மூலம் இலவசமாகப் பெற்று பிறருக்கும் பகிரலாம். இந்த பணிக்கு தன்னார்வ தொண்டர்கள் தங்கள் திறமை, நேரத்தை வழங்கி உதவலாம். முடிந்தவர்கள் நன்கொடையாகவும் தந்து இப்பணியை தாங்கலாம்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண் : 9385201453

# அடுத்த சுடரில்

பகுதி-1

## வழிபாட்டு வழிகாட்டி

புனிதர் அனைவரின் பெருவிழா
இறந்த நம்பிக்கையாளர்கள் அனைவரின் நினைவு
புனித மார்ட்டின் தெ போரஸ்
புனித சார்லஸ் பொரோமியோ
பொதுக்காலத்தின் 32ம் ஞாயிறு
இலாத்தரன் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு விழா
புனித பெரிய லியோ
புனித ஜோசபாத்
பொதுக்காலத்தின் 33ம் ஞாயிறு
அங்கேரி நாட்டு புனித எலிசபெத்
புனிதர்கள் பேதுரு, பவுல் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு
புனித கன்னிமரியாவை காணிக்கையாக அர்ப்பணித்தல்
நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து அனைத்துலக அரசர் பெருவிழா
புனித முதலாம் கிளமெண்ட்
அலெக்சாந்திரியா நகர்ப் புனித கத்திரின்
திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறு
புனித அந்திரேயா திருத்தூதர் விழா

பகுதி-2

## நம்பிக்கையில் வளர...

முடிவில்லா வாழ்வு பெறுபவர் யார்?
புனித ஆர்த்தெமெதே சாத்தி வாழ்வை அறிவோம்
மூவொரு உலகின் அரசர் இயேசு கிறிஸ்து
திருஅவைச் செய்திகள்
கடவுள் அமைத்து வைக்கும் மேடை (தொடர்)
மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு (தொடர்)

# அக்டோபர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 01 | வி | குழந்தை இயேசுவின் புனித தெரேசா விழா | எசா. 66: 10-14 | மத். 18: 1-5 |
| 02 | வெ | புனித காவல் தூதர்கள் | யோபு 38: 1, 12-21, 40: 3-4 | லூக். 10: 13-16 |
| 03 | ச | | யோபு. 42: 1-3, 5-6. 12-17 | லூக். 10: 17-24 |
| **04** | **ஞா** | **பொதுக்காலம் 27ம் ஞாயிறு** | **I. எசா. 5: 1-7**<br>**II. பிலி 4: 6-9** | **மத். 21: 33-43** |
| 05 | தி | அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லி சலேசிய மேனாள் மாணவர் | கலா. 1: 6-12 | லூக். 10: 25-37 |
| 06 | செ | | கலா: 1: 13-24 | லூக். 10: 38-42 |
| 07 | பு | புனித செபமாலை அன்னை | தி.பணி 1:12-14 | லூக். 1: 26: 38 |
| 08 | வி | | கலா. 3: 1-5 | லூக். 11: 5-13 |
| 09 | வெ | புனிதர்கள் டென்னிஸ், மற்றும் ஜான் லெயோனார்டி | கலா. 3: 7-17 | லூக். 11: 15-26 |
| 10 | ச | | கலா. 3: 22-29 | லூக். 11: 27-28 |
| **11** | **ஞா** | **பொதுக்காலம் 28ம் ஞாயிறு** | **I. எசா. 25: 6-10**<br>**II. பிலி. 4: 12-14, 19-20** | **மத். 22: 1-14** |
| 12 | தி | | கலா. 4: 22-24, 26-27, 31-5:1 | லூக். 11: 29-32 |
| 13 | செ | அருளாளர் அலெக்ஸ்சாண்ட்ரீய மரிய தக்கோஸ்தா | கலா. 5: 1-6 | லூக். 11: 37-41 |
| 14 | பு | புனித முதலாம் கலிஸ்டஸ் | கலா. 5: 18-25 | லூக். 11: 42-46 |
| 15 | வி | இயேசுவின் (அவிலா நகர்) புனித தெரேசா | எபே. 1: 1-10 | லூக். 11: 47-54 |
| 16 | வெ | அருளாளர் அகுஸ்தின் தேவாரம்பரம்பில் | எபே. 1: 11-14 | லூக். 12: 1-7 |
| 17 | ச | அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் | எபே. 1: 15-23 | லூக். 12: 8-12 |
| **18** | **ஞா** | **பொதுக்காலம் 29ம் ஞாயிறு** | **I. எசா. 45: 1.4-6**<br>**II. 1தெச. 1: 1-5** | **மத். 22: 15-21** |
| 19 | தி | புனிதர்கள் ஜான் தெ பிரபெப் ஐசக் ஜோக்ஸ் | எபே. 2: 1-10 | லூக். 12: 13-21 |
| 20 | செ | | எபே. 2: 12-22 | லூக். 12: 35-38 |
| 21 | பு | | எபே. 3: 2-12 | லூக். 12: 39-48 |
| 22 | வி | புனித இரண்டாம் ஜான்பால் | எபே. 3: 14-21 | லூக். 12: 49-53 |
| 23 | வெ | பக்பெஸ்த்தரானோ நகர்ப் புனித ஜான் | எபே. 4: 1-6 | லூக். 12: 54-59 |
| 24 | ச | புனித அந்தோணி மரிய கிளாரெட் | எபே. 4: 7-16 | லூக். 13: 1-9 |
| **25** | **ஞா** | **பொதுக்காலம் 30ம் ஞாயிறு** | **I. விப. 22: 21-27**<br>**II. 1தெச. 1: 5-10** | **மத். 22: 34-40** |
| 26 | தி | | எபே. 4: 32-5:8 | லூக். 13: 10-17 |
| 27 | செ | | எபே. 5: 21-33 | லூக். 13: 18-21 |
| 28 | பு | புனிதர்கள் சீமோன், யூதா, திருத்தூதர்கள் விழா | எபே. 2: 19-22 | லூக். 6: 12-19 |
| 29 | வி | அருளாளர் தொன் மைக்கேல் ரூவா | எபே. 6: 10-20 | லூக். 13: 31-35 |
| 30 | வெ | | பிலி. 1: 1-11 | லூக். 14: 1-6 |
| 31 | ச | | பிலி. 1: 18-20 | லூக். 14: 1,7-11 |

# DEEPAGAM

proudly presents...



TO SHARE THE LIGHT

## Certificate of EXCELLENCE





**6 DAYS**
**Session throughout 2026**

## PACE | Professional Approach to Christian Education

Training Teachers to engage in holistic process of Christian Education

**Phase 1: 6 October 2026**
**Phase 2: 27 October 2026**
**Phase 3: 3 November 2026**

## PAVE | Professional Approach to Value Education

Training Teachers for an effective and systematic approach in imparting moral values in children

**Phase 1: 7 October 2026**
**Phase 2: 28 October 2026**
**Phase 3: 4 November 2026**

**Programme Fee: Rs.1500/- per teacher**
**The fee includes all three phases of the programme.**

**Kindly send us the names of the participants through WhatsApp to 8438754518 / 9385201453**

---

**For any enquiries, you may contact:**
**Mrs. Pauline Rose**
**Coordinator - Deepagam**
**Mobile: 7338948203**

VENUE : DEEPAGAM - Don Bosco Centre for Faith and Value Education
No.45, Landon's Road, Kilpauk, Chennai-600010

+91 9385201453 **deepagamdonbosco**

தீபகம் தொன் போஸ்கோ மறைப்பணி மையம் வழங்கும்

# "நீங்கள் என்னை யார் என்கிறீர்கள்?"

## நற்செய்தியுடன் ஓர் ஆண்டு

— மத்தேயு 16:15

மாற்கு, மத்தேயு, லூக்கா, யோவான் நற்செய்திகளை ஓர் ஆண்டில் ஆழமாகப் படித்து இயேசுவைச் சந்திக்க உங்களை அழைக்கிறோம்.

வகுப்புகளை **சலேசிய விவிலிய பேராசிரியர்கள்** நடத்துவார்கள்.

**வகுப்பு:** மாதம் ஒருமுறை, கடைசி சனிக்கிழமை, மாலை 4 மணி முதல் 7 மணி வரை | வாசிப்புத் திட்டம் முன்கூட்டியே வழங்கப்படும் | **முடிவில் சான்றிதழ்**

| மாதம் | வகுப்பு நாள் | வாசிக்க வேண்டிய நற்செய்திப் பகுதி |
|---|---|---|
| அக்டோபர் 2026 | 24-10-2026 | **மாற்கு நற்செய்தி — அதிகாரம் 1–8**<br>**வாரம் 1:** 1–2 \| **வாரம் 2**: 3–4 \| **வாரம் 3**: 5–6 \| **வாரம் 4**: 7–8 |
| நவம்பர் 2026 | 28-11-2026 | **மாற்கு நற்செய்தி — அதிகாரம் 9–16**<br>வாரம் 1: 9–10 \| வாரம் 2: 11–12 \| வாரம் 3: 13–14 \| வாரம் 4: 15–16 |
| டிசம்பர் 2026 | 19-12-2026 | **மத்தேயு நற்செய்தி — அதிகாரம் 1–14**<br>வாரம் 1: 1–4 \| வாரம் 2: 5–7 \| வாரம் 3: 8–11 \| வாரம் 4: 12–14 |
| ஜனவரி 2027 | 30-01-2027 | **மத்தேயு நற்செய்தி — அதிகாரம் 15–28**<br>வாரம் 1: 15–17 \| வாரம் 2: 18–20 \| வாரம் 3: 21–24 \| வாரம் 4: 25–28 |
| பிப்ரவரி 2027 | 27-02-2027 | **லூக்கா நற்செய்தி — அதிகாரம் 1–12**<br>வாரம் 1: 1–4 \| வாரம் 2: 5–7 \| வாரம் 3: 8–10 \| வாரம் 4: 11–12 |
| மார்ச் 2027 | 27-03-2027 | **லூக்கா நற்செய்தி — அதிகாரம் 13–24**<br>வாரம் 1: 13–16 \| வாரம் 2: 17–19 \| வாரம் 3: 20–22 \| வாரம் 4: 23–24 |
| ஏப்ரல் 2027 | 24-04-2027 | **மீள்பார்வை, கேள்விகள் மற்றும் தெளிவுப்படுத்தல்**<br>மாற்கு, மத்தேயு, லூக்கா நற்செய்திகளை மீண்டும் வாசித்து விவாதித்தல் |
| மே 2027 | — | *விடுமுறை (வகுப்பு இல்லை)* |
| ஜூன் 2027 | 26-06-2027 | **யோவான் நற்செய்தி — அதிகாரம் 1–8**<br>வாரம் 1: 1–2 \| வாரம் 2: 3–4 \| வாரம் 3: 5–6 \| வாரம் 4: 7–8 |
| ஜூலை 2027 | 31-07-2027 | **யோவான் நற்செய்தி — அதிகாரம் 9–16**<br>வாரம் 1: 9–10 \| வாரம் 2: 11–12 \| வாரம் 3: 13–14 \| வாரம் 4: 15–16 |
| ஆகஸ்ட் 2027 | 28-08-2027 | **யோவான் நற்செய்தி — அதிகாரம் 17–21 மற்றும் முதல் தொகுப்பு**<br>வாரம் 1: 17–18 \| வாரம் 2: 19–20 \| வாரம் 3: 21 \| வாரம் 4: 1 & 6 |
| செப்டம்பர் 2027 | 25-09-2027 | **யோவான் நற்செய்தி — இறுதித் தொகுப்பு**<br>வாரம் 1: 10 & 12 \| வாரம் 2: 13 & 15 \| வாரம் 3: 18 & 19 \| வாரம் 4: 20 & 21 |

**இடம்:** தீபகம், தொன் போஸ்கோ மறைப்பணி மையம், சிட்டாடல், எண் 45, லண்டன்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை – 600010.

**கட்டணம்:** ரூ.1000/- **முன்பதிவுக்கு மற்றும் தொடர்புக்கு :** திரு. தேவராஜ் (9003112385)

*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)

*கணினியேற்றம்* : **கபிரியேல் மேரி** *வடிவமைப்பு* : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT

*தயாரிப்பில் மேற்பார்வை* : **ஈசாக், மரிய ஜேம்ஸ், சகோ.யோவான் ச.ச**